

# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர்: 14 இதழ்: 10 செப்டெம்பர், 1962 விலை: சதம் 15

# அட்டைப்படம்



காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களின் நினைவு தினமாக செப்ரெம்பர் 26 ஆம் திகதி நாடெங்கணும் அனுஷ்டிக்கப்பட்டது. நாட்டில் உண்மையான சோஷலிஸம் வேரூன்றுவதற்கு அவரது கொள்கைகள் பெரிதும் உதவியுள்ளன என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். அவரது உடல் அடக்கஞ் செய்யப்பட்டுள்ள ஹொரகொல்லேயில் ஒரு நினைவுச் சின்னம் நிறுவப்பட்டுள்ளது. சென்ற செப்ரெம்பர் 26 ஆம் திகதி காலே, மகாதேசாதிபதி வில்லியம் கோபல்லவ அவர்களும், பிரதமர் சிறிமா பண்டாரநாயக்காவும், அவரது குழந்தைகளும், உற்றுரும், அமைச்சர்கள், ஜனப் பிரதிநிதிகள், ஸ்தானீகர்கள், மற்றும் பிரமுகர்கள் ஆகியோரும் ஹொரகொல்லேக்குச் சென்று மலர் வளையங்களை நினைவுச் சின்னத்துக்கு முன்னுல் சாத்தி, மறைந்த உன்னத தலைவருக்கு அஞ்சலி செலுத்தினர். பண்டாரநாயக்கா நினைவுச் சின்னத்தையும் மலர் வளையக் குவியல்களையும் அட்டைப் படத்தில் காணலாம்.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அட்டைப் படம் .. .. .. .. | 2 |
| 2. | மறைந்த பிரதமர் திரு. பண்டாரநாயக்கா .. .. | 3 |
| 3. | ஆயுட் காப்புறுதிப் பாதை .. .. .. | 4 |
| 4. | பௌத்த சமயம் .. .. .. .. | 6 |
| 5. | நான் கண்ட பாரதி .. .. .. | 10 |
| 6. | நவராத்திரி .. .. .. .. | 13 |
| 7. | சுப்பிரமணிய பாரதி .. .. .. | 16 |
| 8. | ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கோயில் வரலாறு .. | 19 |
| 9. | வாழுங்கள் ஆரோக்கியமாக .. .. .. | 22 |
| 10. | ஞானஞ்சலி .. .. .. .. | 24 |
| 11. | மிளகாய் உற்பத்தி.. .. .. .. | 29 |
| 12. | மதிப்புரை .. .. .. .. | 31 |


R. 5323—5,608 (10/62)

# மறைந்த பிரதமர் திரு. பண்டாரநாயக்கா

**திரு. சு. நடேசபிள்ளை அவர்களின் வானொலிப் பேச்சு**

காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா இலங்கைச் சரித்திரத்தில் ஒரு முக்கியமான இடத்தைப் பெறுதற்கு உரியவர். அவரது பூதவுடம்பு அகால முடிவுக்கு உட்பட்ட போதிலும், அவரது புகழுடம்பு நிலைபெற்றுள்ளது. அவரைப்பற்றிய நினைவு இந்நாட்டில் பல்லாயிரக் கணக்கான மக்களின் உள்ளத்தில் பதிந்து வேரூன்றியிருக்கின்றது. அவரது யௌவனப் பருவத்தில் அவர் அரசியல் வாழ்க்கையில் புகுந்த காலத்திலேயே மக்களின் உள்ளத்தை அவர் பெரிதும் கவர்ந்தனர். மிக்க செல்வமும் செல்வாக்கும் படைத்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அவர், தமது அரசியல் வாழ்க்கையின் ஆரம்ப காலத்திலேயே ஆடம்பர வாழ்க்கையைத் துறந்தார். இங்கிலாந்தில் மிகப் பிரசித்தம் பெற்ற ஒரு சர்வகலாசாலையில் கல்வி பயின்று புகழீட்டிய அவர், தம்மைப் பொது மக்களின் சேவைக்கே முற்றுக அர்ப்பணம் செய்து நாட்டின் நலத்துக்கான பல இயக்கங்களில் ஈடுபட்டார். அக்காலத்தில் அவர் முக்கியமாக அரசியல் துறையில் உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டவராக விளங்கினர். இலங்கை சுவாதீனமடையுமாறு ஆங்கிலேய ஆட்சி வர்க்கத்தினரை எதிர்த்துப் போராடிய தலைவர்களின் முன்னணியில் நின்று அவர் அரும் பணியாற்றினர். சாதாரண மக்களின் முன்னேற்றத்துக்காகவே அவர் முக்கியமாக நாட்டின் விடுதலையை நாடி உழைத்தார். 1948 ஆம் ஆண்டில் இலங்கை சுவாதீனமடைந்தபோது கொழும்பில் நடந்த பாராளுமன்ற விழாவில் அவர் ஏழை மக்கள் பசி, பிணி, பயம், கல்வியின்மை முதலியவற்றினின்று விடுதலை அடைவதே நாடு சுவாதீனமடைவதன் குறிக்கோளாக இருக்கவேண்டுமென்று வீர முழக்கம் செய்து நிகழ்த்திய பேருரை சரித்திரப் பிரசித்தம் பெற்றதாகும்.

அப்பொழுது அவர் வற்புறுத்திப் பேசிய கொள்கையை ஆட்சி முறையில் சாதிப்பதற்கு அவருக்கு 1956 ஆம் ஆண்டில் அரிய வாய்ப்புக் கிடைத்தது. அவ்வாண்டில் நடந்த பொதுத் தேர்தலில் அவர் மாபெரும் வெற்றியைப் பெற்றுப் பிரதமர் பதவிக்கு உரியவரானர். அவருக்கு இவ் வெற்றியை அளித்தது சாதாரண மக்களின் பூரண ஆதரவேயாகும். அக்காரணத்தால் அவர்களின் மனப்பான்மையில் ஒரு புதிய உணர்ச்சிவேகம் உண்டாகத் தொடங்கியது. அதற்கு முன் நாட்டின் ஆட்சி, அரசியற் செல்வாக்குள்ள சில பிரமுகர்களின் வசமே இருந்ததென்று அவர்கள் நினைத்திருந்தார்கள். திரு. பண்டாரநாயக்காவின் ஆட்சியில் தங்களுக்குள்ள உரிமையை அவர்கள் உணர்ந்து பெருமிதம் கொண்டார்கள். அவரது அரசியற் கொள்கை சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனுல் அது முற்றும் இடது சாரிக் கொள்கையைத்தழுவவில்லை. இந்தியாவில் பண்டிதர் நேரு கொண்ட அரசியற் கொள்கையையும் பொருளாதாரக் கொள்கையையும் அது பெரும்பாலும் ஒத்திருந்தது.

பண்டிதர் நேருவைப் போல வெளிவிவகாரங்களிலும் திரு. பண்டாரநாயக்கா நடுவு நிலையான கொள்கையை அநுசரித்தார். உலகத்தில் வல்லரசுகளுக்கிடையில் இருந்து வரும் போட்டியில் ஒரு பக்கத்திலும் சாராது உலக சமாதானத்தை நிலைநாட்டக்கூடிய கொள்கையைப் பின்பற்றுவதே உசிதமென்று அவர் கொண்டார். இதனுல் இலங்கை பல நலன்களைப் பெற்றது என்று கூறுவது மிகையாகாது. திரு. பண்டாரநாயக்காவுக்கும் பண்டிதர் நேருவுக்கும் இருந்த கொள்கை ஒற்றுமையால் அவர்களுக்கிடையில் வளர்ந்து வந்த நேச மனப்பான்மை இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரின் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான முடிபு காண்பதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தியது.

திரு. பண்டாரநாயக்காவின் ஞாபகார்த்தமாக நிறுவப்படவிருக்கும் ஒரு நிலையத்தை ஆரம்பித்துவைக்கும் பொருட்டு இன்னும் சில தினங்களில் பண்டிதர் நேரு இலங்கைக்கு வருவதற்கு இசைந்துள்ளது மிகவும் பொருத்தமாகும். ஆயுள்வேத வைத்தியத்தின் அபிவிருத்திக்காக ஓர் ஆராய்ச்சி நிலையத்தை இலங்கையில் நிறுவி ஆசிய நாடுகள் எல்லாவற்றிற்கும் அது பயன்படக்கூடிய முறையில் நடத்துவதற்குத் திரு. பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த காலத்தில் திட்டமிட்டிருந்தார். அவரது அகால மரணத்தால் தடைபட்டு நின்ற அம்முயற்சியை இப்பொழுது பிரதமராக இருக்கும் அவரது அன்புமிக்க பத்தினியார் திருமதி பண்டாரநாயக்கா மேற்கொண்டுள்ளார். இந்நிலையம் திரு. பண்டாரநாயக்காவுக்கு ஏற்றதோர் ஞாபகச்சின்னமாகும்.

(9 ம் பக்கம் பார்க்க)

# ஆயுட்காப்புறுதிப் பாதை

ஆயுட்காப்புறுதி, உழைப்பிற்குரிய பாதுகாப்பை ஆடவர்களுக்கு அளிக்கிறது. மனிதனுல் ஏற்படுத்தப் பட்டுள்ள மற்றெல்லாத் திட்டங்களுள்ளும் தலையாயது ஆயுட்காப்புறுதியாகும். தற்கால நிலையில் ஆயுட்காப்புறுதி அது தேவையானவர்களுக்கு மிகவும் அவசியமானதாகும். மனிதனை நான்குவித ஆபத்துக்கள் எதிர்நோக்குகின்றன என்பதை காப்புறுதி விற்பனையாளர் என்ற முறையில் நாம் அறிவோம். அவையாவன : வேலையின்மை ஆபத்து, சக்தியின்மை ஆபத்து, மரண ஆபத்து, வயோதிபத்தின் ஆபத்து ஆகியனவாம். இவற்றிற்கு எதிராக ஏதேனும் ஒரு வகையில் பாதுகாப்புத் தருவது ஆயுட்காப்புறுதி ஒன்றே. எனவே பாதுகாப்பைப் பெறவும், அதை ஏற்பாடு செய்யவும் காப்புறுதி செய்து கொள்வதே ஒரேவழி என்பதை எவரும் திடமாகக்கூறலாம். வாழ்க்கைச் செலவுகள் விஷம் போல் ஏறிவரும் இக்காலத்தில்—வரிகளும், வரிகள் மேலும் வருமோ என்ற பீதியும் கொண்டுள்ள இந்நிலையில், நமது மக்களில் பெரும்பான்மையோருக்கு ஆயுட்காப்புறுதி மட்டுமே ஏதேனும் ஒரு வழியில் பாதுகாப்பைத்தேடித்தர முடியும்.

ஒருவரின் பாதுகாப்பைக் "கௌரவம்" என்று கூறலாம். அதாவது, கைம்பெண்கள் எதுவித சச்சரவுமின்றிவாழவும், வயோதிபர்கள் தங்களின் வருங்காலத்தை மிக நம்பிக்கையுடன் எதிர்நோக்கவும் இந்தக் "கௌரவம்" வழிசெய்யும். நாம் "கௌரவம்" என்றுகூறும் பாதுகாப்பு மிகவும் வேண்டியதொன்று என்பதை உணரவேண்டும். மனிதன் வாழ்கிருன்—உழைக்கிருன்—தனது உழைப்பை வீட்டுக்குக் கொண்டுவருகிருன். ஓரளவுக்கு அவன் வாழ்க்கையும் போய்க்கொண்டிருக்கிறது. அவனுல் ஆடம்பரமான கார்களில் பிரயாணஞ் செய்யவோ விருந்துகளுக்கு சமுகமளிக்கவோ முடியாமலிருக்கலாம் ; ஆனுல், தனது நண்பர்களை அழைத்துவர அவனுக்கு நிச்சயமாக ஒரு வீடு உண்டு. அவனது மனைவியும் பிள்ளைகளும் ஆடம்பரமாக உடுக்க முடியாமலிருக்கலாம். ஆனுல் தன் அன்புச் செல்வங்களை ஆதரவுடன் அன்பாக வைத்திருக்க அவனுல் முடியும்.

ஒருவர் இறந்தால், அவர் விட்டுச்சென்ற சொத்திலேயே அவரைச் சார்ந்திருப்போர் தங்கியிருக்கவேண்டும். அது போதாதிருந்தால், அல்லது அறவே இல்லாவிட்டால் குடும்பத்தின் கௌரவத்திற்கு ஏதேனும் நடந்தேதீரும். முன்னர் ஒரு காலத்தில் சிறப்பாக இருந்த குடும்பம், பிறகு கஷ்டத்திற்குள்ளாக வேண்டும். குழந்தைகள் உடுத்திருக்கும் கிழிந்த உடைகளைக்காட்டி ஏனையோர் ஏளனஞ் செய்யலாம். அவரின் மனைவி நல்ல சேலையில்லாததினுல், பொதுவைபவங்களுக்குப் போகமுடியாமற் போகலாம். மேலும், தங்களின் ஏழ்மை நிலையால் ஏனையோரைத் தம் வீட்டுக்கு அழைத்து வரமுடியாத நிலைமைக்கும் அப்பெண் உள்ளாகலாம். வருமானம் என ஒன்று இருந்தும்கூட கௌரவத்தை அந்தக் குடும்பம் இழக்கவேண்டி இருந்தால், பின்னர் அந்தக் குடும்பத்தின் பாதுகாப்புக்கு என்ன ஆவது ?

வயோதிபர் ஒருவரைப்பற்றிப் பார்ப்போம். விசாலமான அறையொன்றில் இருந்துகொண்டு தமது குடும்பத்துடன் சிரித்துப் பொழுது போக்கிக்கொண்டிருக்கும் ஒருவருக்கும், கந்தை உடையுடன் நந்தவனத்தின் மூலையில் போடப்பட்டிருக்கும் ஒரு ஆசனத்தில் இருந்துகொண்டிருக்கும் ஒருவருக்குமிடையே எவ்வளவோ வித்தியாசம் உண்டு. முதலாமவர் களிப்புடன் பொழுதுபோக்குகிருர். அடுத்தவர் "இரக்கம் காட்டமாட்டார்களா" என்று ஏங்குகிருர்.

தனி ஒருவருக்கு காப்புறுதி முகவரே பாதுகாப்பை விற்கிருர். இன்னும் சொல்வதானுல் அவர் கௌரவத்தை விற்பனை செய்யும் ஒரு வியாபாரி எனலாம். ஆயுட்காப்புறுதி வாழ்க்கைக்கு காப்பு அளிப்பதுமட்டும் அல்லாது அது வாழ்க்கைப் பாதை ஒன்றையும் உறுதிசெய்கிறது. அது ஆடவர்களுக்குப் பாதுகாப்பை மட்டுமல்ல, சுவாதீனத்தையும் சுதந்திரத்தையுங்கூட வழங்குகிறது.

ஆயுட்காப்புறுதியால் அனுகூலமடைந்த கோடிக்க ணக்கான மக்களை அவதானிக்கும்பொழுது, பொது மக்களுக்குப் பயன்படும் வழிகளில் ஆயுட்காப் புறுதி பணிபுரிவதை நீங்கள் உணர்ந்து கொள் ளலாம். தற்பொழுது எமக்கு அத்தியாவசிய தேவைகளாகவுள்ள மின்சாரம், இருக்குமிடம், போக்குவரத்து முதலியவற்றின் வரிசையில் ஆயுட் காப்புறுதியும் இடம்பெறுகிறது.

ஆயுட்காப்புறுதி இல்லையேல், சதாம் வீதி மூலை யில் ஐவுளிக் கடை ஒன்று நிறுவிக்கொண்டுள்ள வாலிபருக்குத்தனக்கென ஒரு வியாபாரத்தை ஏற் படுத்திக்கொண்டிருப்பது சாத்தியமாக இருக்க முடியாது. இவ்வியாபாரத்தை ஆரம்பிக்க, வங்கி ஒன்றிலிருந்து தனிப்பட்ட கடன் ஒன்று பெற வேண்டியிருந்தது. கடன் வாங்குபவர் நல்நிலையிலி ருந்தால் மட்டுமே தனிப்பட்ட கடனைப் பெற்றுக்கொள் ளலாம். அகாலமரணம், கடன் பெறுபவரை மட்டு மல்ல, அவர் பெற்றுக்கொண்ட கடன் பணத்தை யும் "அழித்து" விடும். இந்தக் கஷ்டத்திலிருந்து விடுபடவே, ஆயுட்காப்புறுதிப் பத்திரம் ஒன்றைச் சாட்டுதல் செய்யவேண்டுமென வங்கி வற்புறுத் தியது. எனவே, ஆயுட்காப்புறுதி இல்லாமல் இருந் திருப்பின், அந்த வாலிபரால் தனக்கென ஒரு வியா பாரத்தை ஏற்படுத்தியிருக்க முடியுமா? அல்லது தேவையான ஒரு வியாபார சேவையைச் சமூகம் பெற்றிருக்கத்தான் முடியுமா?

தமது மனைவிக்கும் குழந்தைகளுக்கு மெனச் சொந்தமாக ஒரு வீடு கட்டுவதற்குக் கனவுகண்ட ஒரு உத்தியோகத்தரைப்பற்றிக் கவனிப்போம். அவர் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு 20 வரு டங்களில் தீர்க்கும்வகையில் ஏதேனும் ஒன்றை ஈடுவைக்கவேண்டி ஏற்பட்டது. ஆயுட்காப்புறுதிப் பத்திரம் இல்லாதிருப்பின் அவருக்கு இது சாத் தியமாயிருக்க முடியாது. தான் இல்லாவிட்டால் கூட வீட்டிலிருந்து தனது குடும்பம் வெளியேற்றப்படா தென்று நம்பிக்கையூட்டியது ஆயுட்காப்புறுதியே யாம். ஆயுட்காப்புறுதி இல்லாதிருப்பின் ஒரு குடும் பம் தனது சொந்த வீட்டில் இருந்திருக்க முடியுமா? ஒரு வீட்டுச் சொந்தக்காரரை சமூகம் பெற்றிருக்க முடியுமா? வீடுகட்டும் தொழிலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதையெல்லாம் தற்பொ ழுது நீங்கள் உணர்ந்துகொண்டிருப்பீர்கள்.

1950 ம் ஆண்டு ஓய்வுபெற்ற ஒருவர் தமது மனைவியுடன் சித்திரைக்காலத்தை மலைப்பகுதிகளில் எங்ஙனம் கழிக்கிறார் என்பதைப் பார்ப்போம். வேண்டியபோது அவர்களுடைய கார் அவர்களைக் கொழும்பிலிருந்து நுவரெலியாவுக்குக் கொண்டு செல்கிறது. சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களுக் குப் பிரயாணம் செய்வது அவர்களின் பொழுது போக்கு. அவர் ஏதோ பெரிய வருமானம் உடையவர் என்று சொல்லிவிட முடியாது. தமது மூன்று பிள்ளைகளையும் படிக்கவைத்தது பெரும் தியாகமா கவே இருந்தது. ஆனால், அவர் உழைக்கத் தொ டங்கிய நாள் தொடக்கம் ஆயுட்காப்புறுதிப் பாதை யில் தமது உழைப்பைக் காக்க முற்பட்டார். அவர் ஓய்வுபெறும் நேரம் வந்தபொழுது, காப்புறுதி ஆண்டுத்தொகைகளாக மாற்றப்பட்டன. ஆயுட்காப் புறுதி பெற்றிராவிட்டால் வயதுவந்த குடும்பம் உருவத்திலும் உணர்விலும் வயது வந்ததாகவே இருந்திருக்கும். வயது போனஜோடி ஒன்றும் கௌரவத்தை, சுதந்திரத்தை, சந்தோஷத்தை, எல்லாவற்றையுமே இழந்திருக்க வேண்டுமல்லவா?

ஒரு வீட்டைக் காப்பதற்காக ஆயுட்காப்புறுதி விற்பனை செய்யப்படுகிறது. நாம் வீட்டைப் பாதுகாக் கும்பொழுது எமது தேசிய அமைப்பின் அடிப்படை யையே பாதுகாக்கிறோம். பாதுகாப்பான வீடுகளைக் கொண்ட ஒரு நாடு, என்றும் வலிமை பொருந்திய நாடே!

எமது பிள்ளைகளின் வருங்காலத்துக்கு உத்தரவா தமளிக்க ஆயுட்காப்புறுதி விற்கப்படுகிறது. இன் றைய குழந்தைகளே நாளைய பிரஜைகள். ஆரோக் கியமுள்ள, கல்வியறிவுள்ள, சந்தோஷமான பிரஜைகளைக்கொண்ட நாடு என்றும் வலிமை பொருந்திய நாடே!

கோடிக்கணக்கான மக்கள் தவணைக்கட்டணங்கள் செலுத்துவதன் மூலம் எமது கைத்தொழில் வளர் கிறது. இதனால் ஏராளமானோருக்குச் சிறந்த தொண்டு புரிகிறோம்; வாழ்வு, சுவாதீனம், மகிழ்ச்சி முதலியவற்றை அழியாமல் காக்கிறோம்; வாழும் வழிக்குவகை செய்கிறோம்!

# பௌத்த சமயம்

மயிலை திரு. சீனி வேங்கடசாமி

பகவன் புத்தர் பரி நிர்வாணம் அடைந்த சில காலத்திற்குப் பிறகு பௌத்த மதத்தில் சில பிரிவுகள் தோன்றின. அந்தப் பிரிவுகளை ஹீனயான பௌத்தம், மஹாயான பௌத்தம் என்னும் இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்கலாம். ஹீனயான பௌத்தத்திற்குத் தேரவாத பௌத்தம் என்றும் அநுத்மவாத பௌத்தம் என்றும் பெயர்கள் உண்டு. இதுவே பழமையான பௌத்த மதம். மஹாயான பௌத்தம் பிற்காலத்தில் தோன்றியது.

இவ்விரண்டு வகையான பௌத்த மதங்களும் அவற்றின் பிரிவுகளும் பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டிலே இருந்தன. இப்போது தமிழ் நாட்டிலே பௌத்த மதம் முழுவதும் மறைந்துவிட்டது. இலங்கை, பர்மா, சீனம், திபெத்து முதலிய தேசங்களிலே இன்றும் பௌத்த மதம் நிலைபெற்றிருக்கிறது.

தமிழ் மொழியிலே பௌத்த சமய நூல்கள் பல இருந்தன. அவை யெல்லாம் சமயப் பகை காரணமாகப் பிற்காலத்திலே அழிக்கப்பட்டன. இப்போது தமிழில் எஞ்சியுள்ள பௌத்த காவியம் மணிமேகலை ஒன்றுதான். மணிமேகலையிலே தேரவாத பௌத்தம் (அநுத்மவாத பௌத்தம்) கூறப்படுகிறது. ஆகவே, தேரவாத பௌத்தக் கொள்கை (தேரவாத தத்துவம்) என்ன என்பதை இங்கு விளக்குவோம்.

பௌத்த மதத்தில் இல்லறம் துறவறம் என்னும் இரண்டு அறங்களே உள்ளன. இல்லறத்தாராகிய சாவக நோன்பிகள் மும்மணிகளை வணங்கிப் பஞ்ச சீலங்களைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். ஆனால், இல்லறத்தார் பிறவா நிலையாகிய நிர்வாண மோக்ஷம் அடைய முடியாது. துறவறத்தில் நின்றவர் மும்மணிகளை வணங்கிப் பத்துவகைச் சீலங்களை மேற்கொண்டு, நான்கு வாய்மைகளைக் கடைப்பிடித்து, அஷ்டாங்கமார்க்கத்தில் ஒழுகி, ஞானம், யோகம் ஆனபான ஸ்மிருதி முதலியவைகளைச் செய்வார்களானால், பிறவா நிலையாகிய பேரின்பமாகிய நிர்வாண மோக்ஷத்தைப் பெறக்கூடும்.

பௌத்தர்களில் இல்லறத்தாரும் துறவறத்தாரும் புத்தர், தர்மம், சங்கம் என்னும் மும்மணிகளைச் சரணம் (அடைக்கலம்) அடையவேண்டும். இதற்குத் திரிசரணம் என்பது பெயர். திரிசரணத்தின் பாலி மொழி வாசகம் இது.

புத்தம் சரணங் கச்சாமீ
(புத்தனிடம் அடைக்கலம் புகுகிறேன்.)
தம்மம் சரணங் கச்சாமீ
(தர்மத்தினிடம் அடைக்கலம் புகுகிறேன்.)
சங்கஞ் சரணங் கச்சாமீ
(சங்கத்தினிடம் அடைக்கலம் புகுகிறேன்.)

இதை மூன்று முறை சொல்ல வேண்டும். அதாவது மும்மணியை மூன்று முறைவணங்க வேண்டும். "முத்திற மணியை மும்மையின் வணங்கி" என்பது மணிமேகலை வாக்கு.

பௌத்த பிக்ஷுக்கள் தசசீலத்தை (பத்துவகையான ஒழுக்கத்தை) மேற்கொள்ள வேண்டும். தசசீலங்களாவன : 1. கொல்லாமை. 2. கள்ளாமை. 3. பிறனில் விழையாமை. 4. பொய் சொல்லாமை. 5. கள்ளுண்ணாமை. (இவை பஞ்ச சீலம் எனப்படும். இவை இல்லறத்தாருக்கும் துறவறத்தாருக்கும் பொது. இவற்றுடன் வேறு ஐந்து சீலங்களைத் துறவிகள் மேற்கொள்ள வேண்டும். அவை :) 6. உண்ணத் தகாத நேரத்தில் உணவு கொள்ளாமை. 7. இசை, ஆடல், பாடல், நாடகம் முதலியவற்றைக்கேட்டலும் பார்த்தலும் செய்யாமை 8. சந்தனம், மலர் முதலிய நறுமணப் பொருள்களை நீக்குதல். 9. உயரமானதும் விசாலமானதுமான ஆசனங்களை நீக்குதல். 10. நாணயங்களையும் வெள்ளி பொன் முதலிய விலையுயர்ந்த பொருள்களையும் நீக்குதல் என்பன.

திரிசரணம் தச சீலம் இவற்றை மேற்கொண்டால் மட்டும் போதாது, நிர்வாணமோக்ஷம் அடைவதற்கு. இவற்றுடன் நான்கு வாய்மைகளையும் எண் வகையான நெறிகளையும் கைக்கொண்டு ஒழுக வேண்டும். நான்கு வாய்மைகளை ஆரியசத்தியம் என்றும், எட்டு வகையான நெறிகளை ஆரிய அஷ்டாங்க மார்க்கம் என்றும் கூறுவார்கள். (ஆரிய என்றால் உயர்ந்த என்பது பொருள்.)

நான்கு வாய்மைகளாவன : 1. துன்பம். 2. துன்ப காரணம். 3. துன்ப நீக்கம். 4. துன்பம் நீக்கும் வழி என்பன. இவற்றைத் துக்கம், துக்க காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண

மார்க்கம் என்றும் கூறுவார்கள். இவற்றை விளக்கிக் கூறுவோம் :

1. துக்கம் (துன்பம்) :—பிறப்பு துன்பமானது. நோய்கள் துன்பத்தைத் தருகின்றன. நரை, திரை, மூப்பு, மரணம் முதலியனவும் துன்பத்தைத் தருகின்றன. நாம் விரும்பாத பொருள்கள் நமக்குத் துன்பந்தருகின்றன. நாம் விரும்பும் பொருள்கள் கிடைக்காமற் போனுல் துன்பம் உண்டாகிறது. சுருங்கக் கூறினுல் ஐம்புலன்களினுலும் துக்கம் ஏற்படுகிறது.

2. துக்க காரணம் :—பிறவிக்குக் காரணமாகிய ஆசை, ஐம்புலன்களைத் துய்க்கும் விருப்பம், தெய்வலோகத்தில் பிறந்து பெரிய இன்ப சுகங்களை அனுபவிக்கவேண்டும் என்னும் நினைப்பு, இந்த வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டு தற்கொலை செய்துகொள்வது முதலியன துன்பத்திற்குக் காரணங்களாகும்.

3. துக்க நிவாரணம் :—அறியாமையாகிய அஞ்ஞானத்தை ஒழிப்பதும், ஆசை, அவா முதலிய பற்றுக்களை நீக்குவதும் துன்பநீக்கம் ஆகும்.

4. துக்க நிவாரண மார்க்கம் :—எட்டுவித உயர்ந்த வழிகளாகிய அஷ்டாங்க மார்க்கத்தைமேற்கொண்டு நடப்பதே துன்பத்தை நீக்கும் வழியாகும். (அஷ்டாங்க மார்க்கம் பின்னர் விளக்கப்படும்).

(வாய்மை விளக்கம்)

**1. துக்கம் :**

அ. பிறப்பு, மூப்பு, நோய், மரணம் முதலிய எட்டு வகையான துக்கம்.

ஆ. துக்கம், அநித்தியம், அனுத்மம்.

**2. துக்க காரணம் :**

அ. இறந்தகால காரணம்.

1. பேதைமை (அவிஜ்ஜை), 2. செய்கை (சம்ஸ்காரம்).

ஆ. நிகழ்கால காரியம்.

3. உணர்வு (விஞ்ஞானம்), 4. அருவுரு (நாமரூபம்), 5. வாயில் (ஷடாயதனு), 6. ஊறு (ஸ்பர்சம்), 7. நுகர்வு (வேதனை).

இ. நிகழ்கால காரணம்.

8. வேட்கை (திருஷ்ணை), 9. பற்று (உபாதானம்), 10. கருமத் தொகுதி (பவம்).

ஈ. எதிர்கால காரியம்.

11. தோற்றம் (ஜாதி), 12. மூப்பு, சாக்காடு (ஜரா, மரணம்).

**3. துக்க நிவாரணம் :**

அ. அர்ஹந்த நிலையை அடைவது.

ஆ. நிர்வாண மோக்ஷம் பெறுவது.

**4. துக்க நிவாரண மார்க்கம் :**

அ. எட்டுவித நெறி, (அக்ஷ்டாங்க மார்க்கம்).

எட்டுவித உயர்ந்த வழியாகிய அஷ்டாங்க மார்க்கத்தைக் கூறுவோம். அவை யாவன : 1. நற்காட்சி. 2. நல்லொழுக்கம். 3. நல்வாய்மை. 4. நற்செய்கை. 5. நல்வாழ்க்கை. 6. நன்முயற்சி. 7. நற்கடைப்பிடி. 8. நற்றியானம் என்பன. இவற்றை முறையே பாலிமொழியில் ஸம்மா திட்டி, ஸம்மா ஸங்கப்போ, ஸம்மா வாசா, ஸம்மா கம்மதோ, ஸம்மா ஆஜீவோ, ஸம்மா வியாயாமோ, ஸம்மா ஸதி, ஸம்மா ஸமாதி என்று கூறப்படும். இவற்றை விளக்குவோம்.

1. நற்காட்சி (ஸம்மா திட்டி) :—மேலே கூறப்பட்ட நான்கு வாய்மைகளை (சத்தியங்களை) நன்ருக ஆழ்ந்து சிந்தித்து அறிந்து கொள்வது. அன்றியும்,

**'பேதைமை செய்கை யுணர்வே யருவுரு**
**வாயில் ஊறே நுகர்வே வேட்கை**
**பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்**
**இற்றென வகுத்த இயல்பீ ராறும்**
**பிறந்தோர் அறியில் பெரும்பே றறிகுவர்**
**அறியார் ஆயின் ஆழ்நர கறிகுவர்'**
**(மணிமேகலை, 14 ஆம் காதை)**

என்பதை ஐயந்திரிபறத் தெரிந்துகொள்வதே நற்காட்சி எனப்படும்.

2. நல்லொழுக்கம் (ஸம்மா ஸங்கப்போ) :—தன்னலத்தை மறந்து எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக இருத்தல். வாழ்க்கையின் நோக்கம் பிறவித் துன்பத்திலிருந்து (துக்கத்திலிருந்து) விடுதலையடைவது தான் என்னும் எண்ணத்தோடு எப்போதும் எல்லா உயிர்களிடத்திலும் அன்பையும் நல்லெண்ணத்தையும் வளர்த்தல். சிற்றின்ப எண்ணங்களை ஒழித்தல்.

3. நல்வாய்மை (ஸம்மா வாசா) :—பொய் சொல்லுதல், புறங்கூறுதல், கடுமொழி பேசல், அவதூறு கூறல், பயனில்லாப் பேச்சுக்களைப் பேசுதல் முதலியவற்றை நீக்கி உண்மையையே பேசுவது. பேசும்போது அன்பாகவும் இனிமையாகவும் பேசுதல்.

4. நற்செய்கை (ஸம்மா கம்மதோ) :—கொலை செய்தல், களவு செய்தல், காமம் விழைதல் முதலிய பாவமும் தீமையும் ஆன செயல்களைச் செய்யாமல் நல்ல செயல்களைச் செய்துகொண்டு ஒழுக்கமாகவும் அமைதியாகவும் இருத்தல்.

5. நல்வாழ்க்கை (ஸம்மா ஆஜீவோ) :—அடிமைகளை விற்பது, மாமிசத்துக்காகப் பிராணிகளை விற்பது, மயக்கந் தருகிற கள், மதுபானம், அபினி முதலிய பொருள்களை விற்பது, நோய் உண்டாக்குவதும் உயிர்போக்குவதும் ஆன நஞ்சுப் பொருள்களை விற்பது, கொலைக்குக் காரணமான கத்தி, ஈட்டி, வாள், அம்பு முதலிய ஆயுதங்களை விற்பது, சூதுவாது செய்வது ஆகிய செயல்களைச் செய்யாமல் நல்ல செயல்களை மட்டும் செய்வது. அதாவது உயிர்களுக்குத் துன்பஞ்செய்யும் செயல்களைச் செய்யாமல் அகிம்சையை மேற்கொண்டு வாழ்தல்.

6. நன் முயற்சி (ஸம்மா வியாயாமோ) :—தீய எண்ணங்களும் தீய செயல்களும் தன்னிடம் உண்டாகாமல் தடுத்து நல்ல எண்ணங்களையும் நல்ல செயல்களையும் வளர்ப்பது நன் முயற்சி எனப்படும். தீய எண்ணங்கள் மனத்தில் தோன்றினால் அவற்றை முயற்சியோடு தடுத்து நல்ல எண்ணங்களையும் நல்ல செயல்களையும் வளர்க்க வேண்டும்.

7. நற்கடைப்பிடி (ஸம்மா ஸதி) :—உடம்பின் நிலையாமையை ஆழ்ந்து சிந்தித்து ஐம்பொறி, ஐம்புலன் இவைகளின் உண்மைத் தன்மையை உணர்தல். இவ்விதம் சிந்திப்பது மெஞ்ஞானம் பெறுவதற்கு உதவியாகும்.

8. நற்றியானம் (ஸம்மா ஸமாதி) :—மனத்தை ஒரு நிலையில் நிறுத்தப் பழகுதல். மனதைச் சிதறவிடாமல் அடக்கிக் குசல (நல்ல) எண்ணங்களை நினைத்து மனத்தை ஒரு நிலையில் நிறுத்தப் பழகுதல். இந்தச் சமாதிப் (மன அடக்கம்) பழக்கம், புலன்களையும் மனத்தையும் அடக்கியாள உதவுகிறது. அஞ்ஞானம், ஆசை, பகை முதலிய தீய எண்ணங்கள் நீங்கி ஞானம் வளர உதவுகிறது.

இந்த அஷ்டாங்க மார்க்கத்தில் நற்காட்சி நல்லொழுக்கம் ஆகிய இரண்டினாலே ஞானம் (பஞ்ஞா) உண்டாகிறது. நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை ஆகிய இம்மூன்றினாலே நல்லொழுக்கம் (சீலம்) ஏற்படுகிறது. நன்முயற்சி, நற்கடைப்பிடி, நற்றியானம் ஆகிய மூன்றினாலே மன அடக்கம் (சமாதி) ஏற்படுகிறது.

நான்கு வாய்மைகளை அறிந்து அஷ்டாங்கமார்க்கத்தில் ஒழுகும் பிக்ஷுவானவர் நிர்வாண மோக்ஷம் பெறுவதற்கு ஞானம், தியானம் ஆகிய இரண்டையும் அடையவேண்டும்.

"ஞானம் (மெய்யறிவு) இல்லாதவருக்குத் தியானம் இல்லை. தியானம் இல்லாதவருக்கு ஞானம் இல்லை. யார் ஒருவர் ஞானமும் தியானமும் உள்ளவரோ அவரே நிர்வாண மோக்ஷத்தின் அருகில் இருக்கிறார்" என்றும், (பிக்குவர்க்கம் 13).

"மனத்தை ஒருநிலைப் படுத்துவதனாலே (யோகத்தினாலே) ஞானத்தைப் பெறலாம். யோகம் செய்யாவிட்டால் ஞானம் வளராது. வளர்வதும் தேய்வதும் ஆன இந்த இரண்டு வழிகளையும் அறிந்து ஞானம் வளர்வதற்குரிய வழியில் நடப்பாயாக" என்றும் (மார்க்க வர்க்கம் 10) தம்மபதம் கூறுகிறது.

யோகம் (மனத்தை ஒருநிலைப் படுத்துவது) நான்கு வகைப்படும். அவை மேத்தை, கருணை, முதிதை, உபேக்ஷை என்பன. இந்நான்கையும் பிரமவிகாரம் என்று கூறுவர். இந்நான்கையும் விளக்கிக்கூறுவோம் :

**மேத்தை :** இது மைத்திரி என்றும் கூறப்படும். அதாவது அன்புடைமை. இந்த மைத்திரி (அன்பு) தியானத்தினாலே பகைமை உணர்ச்சி அழிந்து அன்பும் அருளும் வளர்கிறது. சூத்திர நிபாதத்தில் மேத்தை சூத்திரத்தில் இவ்வாறு கூறப்படுகிறது : "எல்லா உயிர்களும் மகிழ்ச்சியோடு இருப்பதாக. அவையெல்லாம் மகிழ்ச்சியோடு சுகமாக வாழ்வதாக. எல்லா உயிர்களும், வலிவுள்ளவையும் வலிவற்றவையும் மேலுலகத்தில் இருப்பவையும் கீழுலகில் இருப்பவையும் சிறியவையும் பெரியவையும் காணப்படுவனவும் காணப்படாதனவும் அண்மையில் இருப்பவையும் சேய்மையில் இருப்பவையும் பிறந்திருப்பவையும் பிறக்கப் போகிறவையும் ஆகிய எல்லா உயிர்களும் மகிழ்ச்சியுடனும் சுகத்துடனும் இருக்கட்டும்." இவ்வாறு மேத்தையைப்பற்றித் தியானம் செய்யவேண்டும்.

**கருணை :** கருணை என்பது மன இரக்கம் உடைமை. எல்லா உயிர்களும் நன்றாக இருக்க வேண்டும் என்று தியானித்தல். எல்லா உயிர்களும் பிறப்பு, இறப்பு முதலிய துன்பங்களை அடைகின்றன ; அத்துன்பங்களிலிருந்து அவை விடுபட வேண்டும் என்று கருணைகொள்ள வேண்டும். பகைவர், நண்பர் என்கிற வேறுபாடு இல்லாமல் எல்லா உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் அடைய வேண்டும் என்று எண்ணித் தியானம் செய்வதே கருணைத் தியானம் ஆகும்.

**முதிதை :** முதிதை என்பது மகிழ்ச்சி என்று பொருள்படும். இந்தத் தியானத்தைச்செய்பவர்,

தாமும் தம்மைச் சேர்ந்தவர்களும் உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் மகிழ்ச்சியோடு இருக்கவேண்டும் என்று கருதித் தியானம் செய்யவேண்டும்.

**உபேக்ஷ :** அதாவது, மன அமைதியுடைமை. மேற்சொன்ன மூன்று தியானங்களையும் செய்து முடித்தவர் பிறகு இந்தத் தியானத்தைச் செய்ய வேண்டும். சுகம் பெற்றபோது இன்பம் அடையாமலும் துக்கம் அடைந்த போது துன்பம் அடையாமலும் மனத்தை ஒரே நிலையில் நிறுத்தல். அதாவது, விருப்பு வெறுப்பு அற்ற மனத்தோடு இருத்தல். இந்த நான்கு தியானத்துடன் அசுபபாவனையையும் செய்தல் வேண்டும். அசுபபாவனை என்பது உடம்பின் இழிதன்மையைச் சிந்தித்துப் பார்த்தல். உயிர் பிரிந்து உடம்பானது வீங்கிப் போதல், கறுத்துப் போதல், அழுகிப் போதல், புழுத்துப் போதல் முதலிய பத்து வகையான அழிவுத் தன்மையடைவதைச் சிந்தித்துப் பார்த்துப் பற்றறுத்தல்.

இவ்வாறு யோக வியானங்களினாலே ஞானம் அடைந்த பிக்ஷுவானவர் பிராணுயாமம் (மூச்சு நிறுத்தல்) செய்ய வேண்டும். மூச்சை நிறுத்தப் பழகும் பிராணுயாமத்திற்கும் பௌத்தர் ஆனு பானஸ் மிருதி என்று கூறுவார்கள். இந்த ஆனுபானஸ் மிருதி செய்வதினாலே பிக்ஷுவானவர் சமாதி நிலையையடைகிறார். இந்தச் சமாதி நிலை நான்கு வகைப்படும். அவை ஸோதாபத்தி நிலை, சைதாகாமி நிலை, அநாகாமி நிலை, அர்ஹத நிலை என்பன. ஸோதாபத்தி நிலையை யடைந்தவர் காயம், வெகுளி, மயக்கம் என்றும் மூன்று குற்றங்களை நீக்கியவர் ஆவார். ஸகதாகாமி நிலையை யடைந்தவர் ஒரே ஒரு பிறப்பை உடையவர் ஆவார். அநாகாமி நிலையை யடைந்தவர் இனிப் பிறவாத நிலையை அடைந்தவர் ஆவார். அர்ஹத நிலையை யடைந்தவர் இந்தப் பிறப்பிலேயே நிர்வாண மோக்ஷத்தைப் பெற்றவர் ஆவார்.

இதுவே தேரவாத பௌத்த சமயத்தின் தத்துவம் ஆகும். சுருக்கமாகக் கூறப்பட்ட இந்தத் தத்துவத்தை விரிவாக அறிய விரும்புவோர், மணிமேகலை 30 ஆவது காதையில் விரிவாகக் காணலாம்.

---

## மறைந்த பிரதமர் திரு. பண்டாரநாயக்கா

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் பிரதமராக இருந்த காலத்திலும் அதற்கு முன்னும் பல ஆண்டுகளாக அவர் ஆயுள்வேத வைத்தியத்தின் வளர்ச்சிக்காக அநேக சிறந்த பணிகளை ஆற்றினர். அவர் சுகாதார மந்திரியாக இருந்த காலத்தில் கொழும்பிலுள்ள ஆயுள்வேதக் கல்லூரியை நன்கு பரிபாலித்தும் பல ஆயுள்வேத வைத்தியர்கள் ஆங்காங்கு வைத்தியசாலைகள் நடத்த உதவி நன்கொடை கொடுத்தும், கிராமச் சங்கங்களும் நகர சபைகளும் ஆயுள்வேத வைத்தியசாலைகளை நிர்வகிக்கவும் அவர் ஆதரவளித்தார்.

திரு. பண்டாரநாயக்கா கிராமச்சங்கங்களும் நகர சபைகளும் நாட்டின் அரசியலுக்கு ஆதாரமான அடிப்படைத்தாபனங்கள் என்ற கொள்கையில் அழுத்தமான நம்பிக்கையுடையவராக இருந்தார். அவர் அரசியல் வாழ்க்கையில் புகுந்த ஆரம்ப காலம் முதற்கொண்டு தமது சொந்த ஊராகிய வியாங்கொடையிலுள்ள கிராமச் சங்கத்தின் தலைவராக இருந்து அதன் காரியங்களில் கவனம் செலுத்தி வந்தார். கிராமச்சங்கங்களின் சம்மேளமான ஒரு தாபனத்தை நிறுவிப் பல கிராமச்சங்கங்களின் அங்கத்தவர்களோடு அவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். நகர சபைகளின் அபிவிருத்தியிலும் அவர் அதிகமாக ஈடுபட்டிருந்தார். மாகாணங்களின் நிர்வாகத்துக்கும் மாகாண சபைகளை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும் என்பது அவரது நீண்டகாலக்கொள்கையாக இருந்தது. அவர் பிரதமராக இருந்த காலத்தில் இத்தகைய மாகாண சபைகளை உண்டாக்குவதற்கு சட்டமியற்றும் நோக்கமுடையவராக இருந்தார்.

இலங்கை அந்நியராட்சிக் காலத்தில் இழந்த கலாச்சாரத்தை மீண்டும் புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்பது திரு. பண்டாரநாயக்காவின் பேரவாவாக இருந்தது. பௌத்த கலாச்சாரத்துக்கும் சிங்கள மொழிக்கும் நிலைக்களமாக இயங்குதற்கு வித்யோதய பல்கலைக் கழகத்தையும் வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தையும் அவர் நிறுவினர். தமிழ்க் கலாச்சாரத்துக்கு நிலைக்களமாகவும் ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்க வேண்டுமென்று அவர் கருத்துடையவராக இருந்தார். அவரது கருத்துக்கிணங்க யாழ்ப்பாணத்தில் இராமநாதன் பல்கலைக் கழகம் என்ற தாபனத்தை நிறுவுதற்கு அவருடைய பத்தினியார் திருமதி பண்டாரநாயக்கா ஆதரவளித்து வருவது பலரும் அறிந்ததாகும்.

திரு. பண்டாரநாயக்கா அகால முடிவடைந்தது இந்நாட்டின் துரதிருஷ்டமாகும். அவர் ஒரு பெரிய அரசியல் தலைவர் என்று புகழ் பெற்றதோடு, கல்வி கேள்விகளிற் சிறந்தவராகவும் வியக்கத்தக்க வாக்குவன்மை படைத்தவராகவும் விளங்கினர்.

# நான் கண்ட பாரதி

திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டமான்

எனக்கு பன்னிரண்டு வயதிருக்கும்போதுதான் முதன் முதல் நான் பாரதியாரைப் பார்த்தேன். என் தந்தையாரும் அவரும் பள்ளித் தோழர்கள். ஆனதால் ஒரு நாள் மாலே அவர் எங்கள் வீட்டிற்கே வந்திருந்தார். நடுத்தரமான உயரமும் ஒட்டிய கன்னங்களும், விசாலமான கண்களும் உடையவர் அவர். பாரதியார் என்று நினேத்த உடனே என் மனக்கண்முன் வந்து இன்று நிற்பது அவருடைய முறுக்கு மீசையும் கிறுக்கு நெஞ்சமும் தான். அவர் பேசுகிற பேச்செல்லாம் ஒரே குமுறல்தான். எரிமலே கக்குவதைப் போலவே இருக்கும். அவரது உருவத்தையும் அவர் பேசும் பேச்சையும் முதன் முதல் கேட்டபொழுது, இது ஒரு பயித்தியமோ என்றுதான் சந்தேகப்பட்டேன்.

**பெண்மைக் குணமுடையான் சில நேரத்தில்**
**பித்தர் குணமுடையான்—சில நேரம்**
**தண்மைக் குணமுடையான்—சில நேரம்**
**தழலின் குணமுடையான்**

என்று தோழன் கண்ணனேப்பற்றி அவர் கூறிய சொற்கள் அவருக்கே பொருந்தும். பின்னுல் அவர் எங்கள் வீட்டுமாடியில் இருந்துகொண்டு "உலகத்து நாயகியே—எங்கள் முத்து மாரியம்மா எங்கள் முத்து மாரீ" என்று தொடங்கும் அவரது முத்துமாரிப் பாட்டை பாடியபொழுது, அவர் பயித்தியம் பிடித்தவர் அல்ல; ஒரு ஆவேசம் கொண்ட தீர புருஷர் என்று அறிந்தேன். பாட்டுப் பாடும் போது கொஞ்சம் கொஞ்சமாய் சத்தம் உச்சஸ்தாயியில் ஏறி, வீரமும் ஆவேசமும் நிறைந்து வந்த போது கேட்போரை அப்படியே பரவசப்படுத்தி விட்டதெனலாம்.

**பலகற்றும், பலகேட்டும்—எங்கள் முத்து**
**மாரியம்மா, எங்கள் முத்துமாரீ**
**பயனென்று மில்லேயடி எங்கள் முத்து**
**மாரியம்மா, எங்கள் முத்துமாரி—என்றும்**

**மணி வெளுக்கச் சாணேயுண்டு—எங்கள் முத்து**
**மாரியம்மா, எங்கள் முத்துமாரீ**
**மனம்வெளுக்க வழியில்லே எங்கள் முத்து**
**மாரியம்மா எங்கள் முத்துமாரீ என்றும்**

அவர் பாடிய மொழிகள் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. இதுதான் நான் பாரதியாரை பார்த்தும் அவர் பாடியதைக் கேட்டும் அறிந்து கொண்டது. பின்னர் பாரதியாரை, அவரது பாக்களேப் படித்துத்தான்—பாடி என்று சொல்வதற்குத் துணிவில்லே—நன்கு அறிந்து கொண்டேன். இங்கு நான் கண்ட பாரதி என்ற தலேப்பில் நான் பார்த்த பாரதி, நான் கேட்ட பாரதி, நான் அறிந்த பாரதி—எல்லாம் அடங்கும் என்று எண்ணுகின்றேன்.

பாரதியாரிடம் நான் கண்ட பெருமை யெல்லாம் அவர் ஒரு பெரிய கவி என்பதேயாகும். "ஆயிரம் வருஷத்திற்கு, ஒரு தடவைதான் ஒரு கவிஞன் பிறக்கிருன்" என்பது ஓர் ஆங்கில ஆசிரியர் வாக்கு. அவ்வாக்கு முற்றிலும் உண்மையென்று தமிழ் மொழியில் எழுந்த கவிகள் நிரூபித்துவிட்டனர். கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்குப் பின்னே—தமிழ்க் கவி உலகம், ஓர் வரண்ட பாலேவனமாகத்தானிருந்திருக்கிறது. அப்படிப்பட்ட வரண்ட பாலேவனத்தின் இடையே காணும் அழகிய சிங்காரத் தோட்டமும், தடாகமும்தான் நம் பாரதி. காரிகை கற்றுப் பாக்கள் பாடிய புலவர் பலர் தமிழகத்தில் தோன்றியிருக்கலாம். அவர்கள் எல்லோரும் உண்மைக் கவிஞர்களா என்பதுதான் சந்தேகம். உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகளே, சப்த சித்திரங்களாலே சித்தரித்துக் காட்டுவதுதான் உண்மைக் கவியின் இலக்கணம் என்று கொண்டால் இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்த தமிழ்க் கவிஞர்களே விரல்விட்டு எண்ணிவிடலாம். அத்தகைய உண்மைக் கவிஞர்களுக்குள்ளே உண்மைக் கவிஞன்தான் பாரதி.

**கானப்பறவை கலகலெனு மோசையிலும்,**
**காற்று மரங்களிடைக் காட்டு மிசைகிளிலும்**
**ஆற்றுநீ ரோசை, அருவி யொலியினிலும்,**
**நீலப் பெருங்கட லெந்நேரமுமே தானிசைக்கும்,**
**ஒலத்திடையே யுதிக்கு மிசையினிலும்,**
**மானிடப் பெண்கள் வளருமொரு காதலினுல்**
**ஊனுருகப் பாடுவதி லூறிடுந் தேன் வாரியிலும்**
**ஏற்றநீர்ப் பாட்டி னிசையினிலும், நெல்லிடிக்குங்**
**கோற்றெடியார் குக்குவென கொஞ்சு மொலியினிலும்**

**சுண்ணமிடிப் பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்**
**பண்ணைமடவார் பழகு பல பாட்டினிலும்**
**வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள்தாமொலிக்க**
**கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்**
**வேயின் குழலொடு வீணை முதலா மனிதர்**
**வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி**
**நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம்**
**பாட்டினிலும் நன்றெலிக்கும்**

நெஞ்சைப் பறிகொடுத்தவன்தான் உலக மகா கவியாயிருக்க முடியும். பாரதியும் உலக மகா கவிஞனோடு ஒருங்கு வைத்து எண்ணத் தக்கவர் என்பதில் ஐயமுண்டோ! பாரதி—தமிழ்நாட்டின் தேசியக் கவிச்சக்கரவர்த்தி என்று கூறுவர் சிலர். அவரது தேசிய கீதங்களை மட்டும் எடுத்துக்கொண்டு, நாட்டில் நிலவிய தேச பக்தியையும் சுதந்திர உணர்ச்சியையும் ஊக்கி வளர்த்த பெரிமைதான் பாரதிக்கு உண்டு என்று கூறுவார்கள். ஆனால் அவரது தேசிய கீதங்களையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்து விடுவோம். அவரது துக்கடா என்று கருதுகின்ற ஒரு சில பாட்டுகளை மட்டும் எடுத்துக்கொள்வோம். அப்படிப் பார்த்தாலும் கூட பாரதி ஒரு பெரிய கவிதான் என்பதில் சந்தேகமே ஏற்படாது. "கண்ணம்மா—என் குழந்தை" என்ற பாட்டில் வருகின்ற கீழே காணும் மூன்று கண்ணிகளை மட்டும் பாருங்கள் :—

**பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா**
**பேசும் பொற் சித்திரமே !**
**அள்ளி யணைத்திடவே—என் முன்னே**
**ஆடிவருந் தேனே !**

**கன்னத்தில் முத்தமிட்டால்—உள்ளம்தான்**
**கள்வெறி கொள்ளுதடி**
**உன்னைத் தழுவிடிலோ—கண்ணம்மா**
**உன்மத்த மாகுதடி**

**இன்பக் கதைக ளெல்லாம்—உன்னைப்போல்**
**ஏடுகள் சொல்வ துண்டோ ?**
**அன்பு தருவதிலோ—உனைநேர்**
**ஆகுமோர் தெய்வமுண்டோ ?**

இந்த சிறு கண்ணிகளில் ஒரு தாயாரின் உள்ளம் அப்படியே பிரதிபலிக்கின்றதல்லவா? தன் பிள்ளை தன் முன்னால் ஆடி வரும்போதும், அதை எடுத்து தன் உடலோடு சேர்த்து அணைக்கும்போதும் பின்னால் அக் குழந்தையின் மழலைமொழியைக் கேட்கும் போதும், அக் குழந்தையின் தாயாரின் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளை யெல்லாம் எப்படிச் சித்திரித்து விடுகிறார் பாருங்கள். பாரதி எழுதித்தள்ளியிருக்கும் பாட்டுக் களெல்லாம் அழிந்து இம் மூன்று கண்ணிகள் மட்டுமாவது தமிழ்க் கவி உலகத்து மிஞ்சினால்—அதுவே, பாரதி ஒரு பெரிய கவி என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டப் போதியதாகும் என்பதே என் தாழ்ந்த அபிப்பிராயம். பாரதியின் கவிதையைப் பற்றி மட்டும் பேச இவ்விடம் நினைத்தவனில்லை.

பாரதியின் தேசபக்தி உலகறிந்த தொன்றாகும். பாரதியையும் அவர் தேசபக்தியையும் பிரித்தெண்ணுவது என்பது இயலாத காரியம். பாரதிதான் தேசபக்தி, தேசபக்திதான் பாரதி என்னும்படி பாரதியின் உள்ளத்திலே தேச பக்தி ஊறிக்கிடந்தது. அப்படிப்பட்ட உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகளே கவிதா ரூபமாக பரிணமித்து—தேசிய கீதங்களாக வெளிவந்தன.

**கம்ப னென்றொரு மானிடன் வாழ்ந்ததும்**
**காளிதாசன் கவிதை புனைந்ததும்**
**உம்பர் வானத்துக் கோளையு மீனையும்**
**ஓர்ந்தளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்**
**நம்பரும் திறலொடு ஒரு பாணினி**
**ஞாலமீதில் இலக்கணம் கண்டதும்**
**இம்பர் வாழ்வினிறுதி கண்டு உண்மையின்**
**இயல்புணர்த்திய சங்கரன் ஏற்றமும்**

பாரதிபோன்ற ஒரு உண்மைக் கவிஞனை—ஒப்பற்ற ஒரு தேச பக்தனை ஊக்காது வேறென் செயும்?

"பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள் பாரதநாடு" என்று பொதுவாக இந்திய நாட்டின் பெருமையைப் பறையடித்துச் சொல்லும் பாரதி, தான் பிறந்து வளர்ந்த தமிழ் நாட்டைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் அப்படியே உள்ளத்தில் ஒரு உவகை பொங்க பூரித்துப் போய்விடுகிறார்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே அவரது காதில் இன்பத் தேன் வந்து பாயும்.

**காவிரி தென் பெண்ணை பாலாறு—தமிழ்**
**கண்டதோர் வையை பொருனை நதி—என**
**மேவிய ஆறு பலவோடத்—திரு**
**மேனி செழித்த தமிழ்நாடு**

என்று அவர் பாடியுள்ள பாட்டை நாம் பாடும் போது, நாம் அடைகின்ற இன்பம் சொல்லத்தரமன்று.

**கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்**
**கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல**
**பல்விதமாயின சாத்திரத்தின் மணம்**
**பாரெங்கும் வீசும் தமிழ்நாடு**

என்ற அடிகளை நினைக்கும்பொழுதெல்லாம் நம் உடலும் உள்ளமும் அப்படியே பூரிப்படைந்து விடுகின்றன. நாட்டுப் பற்றையும் தாய் மொழிப் பற்றையும் தமிழர்களுக்குள்ளே வளர்த்த பெருமை பாரதியாருடையதே. இன்று தமிழ் மக்களின் தேசிய உணர்ச்சி, முன்னர் இருந்ததை விடப் பல வாருகப் பெருகியிருக்கிறதென்ருல் அதற்கு முக்கிய காரணம் பாரதியும், அவரது பாட்டுக்களும்தான் என்று உறுதியாகச் சொல்லலாம்.

இன்னும், பாரதி நம்மவர்களுக்கு தேசபக்தியோடு, சுதந்திர வாஞ்சையையும் ஊட்டிவிட்டார்.

**நாட்டினி லெங்கும் சுதந்திர வாஞ்சையை**
**நாட்டினுய் கனல் மூட்டினுய்**

என்று அவர் பாடிய அடிகள் அவருக்கே சாலவும் பொருந்தும். பாரதியின் பாட்டுக்களில் தொனிக்கும் பொருளெல்லாம், தேசபக்தி, சுதந்திரம் என்ற இரண்டு வார்த்தைகளுக்குள்ளேயே அடங்கி விடும். "வீர சுதந்திரம் வேண்டி நின்ருர், பின்னும் வேறென்றும் கொள்வாரோ ?" என்பது எவ்வளவு உண்மையான வாக்கு.

**சதையைத் துண்டு துண்டாக்கினு முன்னெண்ணம்**
**சாயுமோ ? சீவன் ஓயுமோ ?**
**இதயத்துள்ளே இலங்கும் மஹா சக்தி**
**யேகுமோ ? நெஞ்சம் வேகுமோ ?**

என்பதுதான் சுதந்திர வீரனது வீர மொழிகளாக நாம் காண்கின்ரேம்.

**என்று தணியு மிந்த சுதந்திர தாகம் ?**
**என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம் ?**
**என்றெம தன்னைகை விலங்குகள் போகும் ?**
**என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும் ?**

என்று கதறுகிருர் பாரதி.

**இதந்தரு மனையி னீங்கி**
**இடர்மிகு சிறைப்பட்டாலும்**
**பதந்திரு இரண்டும் மாறிப்**
**பழிமிகுந் திழிவுற்ருலும்**
**விதந்தரு கோடி யின்னல்**
**விளைந்தெனை யழித்திட்டாலும், சுதந்திரதேவி**
**நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே.**

என்பதுதான் அவரது தினசரி பிரார்த்தனையா கின்றது. பாரதி தான் மட்டும் சுதந்திர தாகம் கொண்டவர் அல்லர்—தம் நாட்டு மக்கள் எல்லோருமே இத்தகைய சுதந்திர தாகமுடையவர்களாக வேண்டும் என்றே விரும்புகின்ருர். மக்கள் எல்லாம்,

**புல்லடிமைத் தொழில் பேணி—பண்டு**
**போயின நாட்களுக் கினிமனம் நாணித்**
**தொல்லை யிகழ்ச்சிகள் தீர இந்த**
**தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி**
**வந்தே மாதரம், வந்தே மாதரம்**

என்று கோஷிக்கவேண்டும் என்பதே அவரது அவாவாக இருக்கின்றது. என்னே, அவரது சுதந்திர தாகம். பாரதியின் கவி வெறியும் தேசபக்தியும் சுதந்திர தாகமும் ஒரு புறமிருக்க, இன்னும் அவர் தமிழ் மக்களுக்குகிடைத்தற்கரிய ஒரு தீர்க்கதரிசியாகவும் இருந்திருக்கிருர். அவர் பிறந்த காலத்தில், நாட்டு மக்கள் சுதந்திரமற்றவர்களாய் அன்னியர்களுக்கு அடிமைப்பட்டு, எப்பொழுதும் வருந்தத் தக்க ஒரு நிலையிலேயே இருந்து வந்திருக்கின்ருர்கள். அவர்களை எப்படி ஈடேற்றுவது என்பது பாரதியின் உள்ளத்தில் என்றும் உறுத்திக்கொண்டிருந்த எண்ணம். முகம்மது, கிருஸ்து, புத்தர் முதலிய தீர்க்கதரிசிகள்போல, இவ்வுலக மக்களெல்லாம் எப்போதும் இன்பநிலையிலேயே இருக்க வேண்டும் என்பதுதான் அவரது அபிலாஷை. "துன்பமே நிறைந்தது இவ்வுலகம்" என்னும் எண்ணம் அவர் முற்றிலும் வெறுத்த தொன்ருகும். உலகமே அவருக்கு இன்பமயமாகத்தான் காட்சியளிக்கின்றது.

**எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள்**
**இறைவா, இறைவா, இறைவா**

என்பதுதான் அவர் இறைவனை நோக்கிச் சொல்லும் பிரார்த்தனை. அவ்வாறு இன்பமாகக் கண்ட இறைவனை, தான் காணும் ஒவ்வொரு பொருளிலும் கண்டு கண்டு மகிழ்கின்ருர்.

(15 ம் பக்கம் பார்க்க)

# நவராத்திரி

நவராத்திரி என்னுஞ் சொல்லுக்கு ஒன்பது நாட்களில் செய்யப்பெறும் நோன்பு அல்லது உற்சவம் என்று பொருள். உற்சவம் முடியும் பத்தாம் நாளையும் கணக்கிட்டு வடநாட்டார் இதைத் தசராவென வழங்குவர். இது ஆச்வின மாதத்தின் (அதாவது புரட்டாசியில் அல்லது அதற்கு முன்வரும்) சுக்கில பட்சப் பிரதமையில் தொடங்கித் தசமியில் முடிவுறும். இதில் வரும் அஷ்டமிக்கு மகாஷ்டமி என்றும், நவமிக்கு மகாநவமி யென்றும் பெயர். ஆகையால் சிலர் இதை மகா நோன்பு அல்லது மகர் நோன்பு என்று சொல்லிக்கொண்டாடுவர். சரத் கால சம்பந்தம் பெற்ற ஆச்வின மாதத்தில் இது வருவதால் இதற்குச் சாரத நவராத்திரம் என்று பெயர் வழங்கும். இதுதான் பிரசித்தமானதும், யாவராலும் கொண்டாடப் பெறுவதுமாகும். இதேபோல் வசந்த நவராத்திரம் என்ற உற்சவமும் உண்டு. இது வசந்த இருது சம்பந்தமுள்ள சைத்திர (சித்திரை அல்லது அதற்கு முன் வரும்) சுக்கில பிரதமையிலிருந்து தொடங்கி தசமியில் முடிவுறும். இது தேவி உபாசகரால் மட்டும் கொண்டாடப்பெறும். துர்க்காதேவியைச் சாரத நவராத்திரத்தில் சண்டிகா என்ற தன்மையிலும், வாசந்த நவராத்திரத்தில் ரக்த தந்திகா என்ற தன்மையிலும், பூசிக்க வேண்டும் என்பது விதி. இவை போல் மாக (மாசி) மாதத்திலும் ஒரு நவராத்திர பூசை சொல்லப்படுகிறது. "சரத்து, வசந்தம் என்ற இவ்விரு இருதுக்களும் யமனுடைய கோரப்பற்கள். இக்காலங்களில் நோய்கள் மல்கி மக்கள் பெருவாரியாக நாசமடைவர். நவராத்திர துர்க்கா பூஜை இதைத் தவிர்க்கும்" என்று தேவி புராணம் கூறும். தேவி, மகிஷன் முதலிய அசுரர்களை வென்று, ஆச்வின சுக்கிலத்தில் அபிஷேகம் செய்யப்பெற்றுள். இக்காரணத்தாலும் சாரத நவராத்திரத்தில் தேவி பூசிக்கப்பெறவேண்டுமென்பர்.

சாரத நவராத்திர பூஜை நித்தியகாமியம் என்ற விதிக்கு உட்பட்டது என்றும், இதை இந்துக்கள் யாவரும் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு வீட்டிலும் வாழ்நாள் முழுவதும் செய்யவேண்டுமென்றும் நூல்கள் கூறும். ஒன்பது நாட்களும் பூசை செய்யச் சக்தியற்றவர் சப்தமி, அஷ்டமி நவமி போன்ற மூன்று நாட்களிலாகிலும் பூசிக்க வேண்டும். அதாவது சப்தமியில் ஆவாகனமும், அஷ்டமியில் பூசையும், நவமியில் பலியுடன் பூசையும், தசமியில் விசர்ஜனமும் செய்ய வேண்டும். அஷ்டமியன்று தக்ஷ யக்ஞ விநாசினியாக யோகினி கணங்களுடன் தேவி ஆவிர்ப்பவித்ததாக ஐதிகம். மூன்று நாட்கள் பூசை செய்ய இயலாதவர் நவமி ஒருநாளாகிலும் செய்ய வேண்டுமென்பர். இக்கடைசி முறையைத் தான் தென்னாட்டினர் பலரும் கடைப்பிடிக்கின்றனர். இப்பூசையின் பலனாக இம்மையில் எல்லா நலன்களும் மறுமையில் வீடும் கிடைக்கும் என்பர்.

பூசை செய்பவர் பிரதமையில் எண்ணெய் முழுக்காடிப் பூசையைத் தொடங்க வேண்டும். கலசம் வைத்து யவம், கோதுமை முதலிய தானியங்களைக் கொண்டு சுற்றிலும் பாலிகை தெளித்துக் கலசத்தில் துர்க்கையை ஆவாகனம் செய்ய வேண்டும். சங்கம், சக்கரம், கதை, பதுமம் இவற்றைக் கையில் ஏந்தி சிங்க வாகனத்தில் அமர்ந்த சண்டியின் பிம்பத்தையோ, பதினென் புயங்களையுடைய காளியின் பிம்பத்தையோ வைத்து, ஜயந்தி முதலிய மந்திரங்களாலோ, நவாட்சர மந்திரத்தாலோ சோட சோபசாரங்களுடன் பூசை செய்ய வேண்டும். பிம்பம் இல்லாவிடின் சிவப்புத் துணியில் நவாட்சர மந்திரத்தோடு கூடிய எந்திரத்தை அமைத்துப் பூசிக்க வேண்டும். உளுந்திலுல் செய்த தீன்பண்டங்களையோ, பூசணிக்காயையோ படைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் காலை, பகல், இரவு என்று மூன்று காலம் பூசை செய்ய வேண்டும. இவற்றுள் இரவு பூசை முக்கியம். உபவாசமிருந்தோ, இரவில் ஒரு வேளை உண்டோ, பிரமசரிய விரதத்துடன் தரையில் படுத்துறங்க வேண்டும். பூசையின் அங்கமாகத் தேவி சப்தசதி என்ற தேவிமான்மிய பாராயனம் முதல் நாள் ஒரு தடவை, இரண்டாம் நாள் இரண்டு தடவை இப்படி ஒன்பது நாளும் செய்யவேண்டும். இரண்டு வயது முதல் பத்து வயது வரையிலுள்ள கன்னிகைகளை நவதுர்க்கைகளாக வைத்து, முறையே குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, ரோகிணி, காளி, சண்டிகா, சாம்பவி துர்க்கை, சுபத்திரை என்ற பெயர்களால் பூசித்து, அவர்களுக்கு மலர் சந்தனம், பழம், கண்ணுடி, இரவிக்கை, ஆடை, அறுசுவை உண்டி இவற்றை வழங்கவேண்டும். சொறி சிரங்கு நோய், அங்கக் குறைவு முதலியன உள்ள கன்னிகைகளை விலக்க வேண்டும். நாள்தோறும் இராம லீலையை நடிப்பித்து, ஒன்பதாம் நாள் இராவண வதத்துடன் முடிக்கவேண்டும். அஷ்டமியில் சண்டியோமம் செய்து, அன்று இரவு முழுதும் விழித்திருக்க வேண்டும். நவமியில் காளி, காளி என்று சொல்

லிக்கொண்டு ஆடுகளையும், எருமைகளையும் பலி கொடுக்க வேண்டும். உயிர்ப்பலிக்குப் பதிலாக மாவினால் செய்த இப்பிராணிகளையோ, பூசணிக்கா யையோ பலியிடலாம். இதன் பின்னர், அன்று உபவாசம் முடித்துப் பாரணை செய்ய வேண்டும். (தசமியில் பாரணை என்ற கொள்கையும் உண்டு) தசமியன்று தேவியை விசர்ஜனம் செய்து சப ரோற்சவம் செய்யவேண்டும். ஒன்பது நாட்களில் முதல் மூன்று நாட்கள் துர்க்கைக்கும், இரண்டாம் மூன்று நாட்கள் இலக்குமிக்கும், மூன்றும் மூன்று நாட்கள் சரசுவதிக்கும் எடுத்தவை என்றும், மூலநட்சத்திரத்தில் புத்தகங்களில் சரசுவதிதேவியை ஆவாகனம் செய்து பூராடத்தில் விசேஷ பூசை செய்து, உத்தராடம் அல்லது நவமியில் பலி கொடுத்துப் பூசித்துத் திருவோணம் அல்லது தசமி யில் விசர்ஜனம் செய்யவேண்டும் என்றும் விதி யுண்டு.

அரசர் சேனையின் விருத்தியின் பொருட்டு, நவ ராத்திரி பூசையுடன் பலநீராசனம் என்ற சடங்கை யும் நடத்தவேண்டும். சுவாதி நட்சத்திரத்தில் உச்சை சிரவசு என்ற குதிரை பாற்கடலில் தோன் றியதாலும், கேட்டையில் அஷ்டதிக்குக் கயங்களும் தோன்றித் திசைகளை வகித்ததாலும் நவராத்திரி யில் சேனையிலுள்ள குதிரைகளையும் யானைகளை யும் பூசித்து, விஜயதசமி யென்ற தசமியன்று வன்னிமரத்துடன் சகந்நாதனையும் பூசித்து பல நீராசனம் என்ற சடங்கை நடத்திக் கஞ்சனம் என்ற பறவையை ஜலாசயத்திற்குப் பக்கத்தில் தரிசனம் செய்து விஜயயாத்திரை செய்யவேண்டும் என்பது விதி. பத்து நாட்களும் அரசர் பரிவாரங்களுடன் கொலு வீற்றிருப்பர்.

தென்னாட்டில் தேவியுபாசகரே இவ்விதம் விரத மிருந்து முறைப்படி பூசை செய்கின்றனர். இக்காலங் களில் இவர்கள் தினந்தோறும் செய்யும் தேவி பூசைகளையும் விசேஷமாக நடத்துகின்றனர். சிவா லயங்களில் அம்பிகைக்குத் தனிப் பூசைகள் நடத் திப் பிரதிதினம் புதுப்புது அலங்காரங்கள்செய்து, அம்பிகையைக் கொலு மண்டபத்தில் கொலு அமர்த் துகின்றனர். எல்லா வுலகுக்கும் அரசியாகிய இராஜ ராஜேசுவரி கொலுவிருக்கையை இது குறிக்கும். பண்டை நாளில் அரசர்களும் நவராத்திரி காலத் தில் நாள்தோறும் கொலுவிருப்பர். இதை அனு சரித்து வீடுகளிலும் பெண்டிர் பொம்மைக்கொலு வைப்பர். இது ஒரு கண்காட்சியாகவும் அமையும். கன்னிகைகளைக் கிருஷ்ணன் முதலிய தேவதை கள் போல் அலங்கரிப்பர். பெண்டிரை அழைத்து மஞ்சள், குங்குமம், தேங்காய் முதலியன வழங்கு வர். அயல் கன்னிகைகளைப் பூசிக்கச் சக்தியற்றவர் வீட்டுக் கன்னிகைகளுக்குப் பூசை நடத்தி உபசரிப்பர். இராமலீலை நடத்த முடியாதவர் இராமாயண பாரா யணம் செய்வர், அல்லது செய்விப்பர். நவமி யன்று சுவடிகளில் சரசுவதி தேவியை ஆவாகனம் செய்து பூசித்து, விஜயதசமியன்று விசர்ஜனம் செய்து பாடம் தொடங்குவர். நவமியன்று தொழி லாளர் தத்தம் தொழிற்கருவிகளை வைத்து ஆயுத பூசை செய்வர். குழந்தைகளைப் புதிதாகப் பள்ளி யில் சேர்க்க விஜயதசமி சிறந்த நன்னாளாகலின், அன்று விசேஷமாக அட்சராப்பிராயசங்கள் நடக்கும்.

**துர்க்கை பூஜை :**

நவராத்திரி நாட்களில் இந்தியாவிலும் மற்ற இடங்களிலும் இந்துக்களால் கொண்டாடப்படுகிறது. இவ்விழா புராணக்காலத்திலேயே தோன்றியது. மார்க்கண்டேய புராணம் சண்டியைப் பற்றிக் கூறு கிறது. மகிஷாசுரனால் தோற்கடிக்கப்பட்ட தேவர்கள் சிவனையும் விஷ்ணுவையும் அடைந்து தங்கள் துன்பங்களை எடுத்துரைத்தனர். சிவனும் விஷ்ணு வும் மிகவும் வருந்தினர். பின்பு விஷ்ணுவின் முகத்திலிருந்தும் பிற தேவர் முகத்திலிருந்தும் ஒளிப் பிழம்புகள் வெளிப்பட்டன. அப்பிழம்பு கள் ஒன்றுகூடிப் பெண்ணுருவம் கொண்டன. அப்பெண்ணுருவமே துர்க்கை. அத்தேவி கடைசி யாக மகிஷசுரனைக் கொன்றாள். அது முதல் துர்க்கை எனப்பட்ட அத்தேவிபூஜை இளவேனிற் காலத்தில் செய்யப்படுகிறது.

இராவணனைக் கொல்லும்பொருட்டு இராமர் இத் தேவியை வணங்கினாரெனக் கூறப்படுகிறது. ஆனால் வழக்கமான இளவேனிற் காலத்தில் அல்லாத மழைக்காலத்தில் தேவியைப் போற்றினார். எல் லோருடைய துயரும் துடைக்கும் தேவி அவர் முன் பத்துக் கைகளுடன் தோன்றினாள். இவ ளுடைய ஒவ்வொரு கையிலும் ஒருவகை ஆயுதம் இருந்தது. தேவியுடன் திருமகளும், கலைமகளும் வலமைக்கும் வீரத்திற்கும் தெய்வமான முருக

னும், வெற்றித் தெய்வமான விநாயகரும் வந்தனர். துர்க்கையின் கோயிலில் தேவி சிங்க வாகனத்தில் ஏறி, மகிஷாசுரனை வீழ்த்தி, அவன் மார்பில் தன் திரிசூலத்தைச் செலுத்தி நிற்பவளாகக் காணப்படுகிருள். இவ்வடிவத்தில் தேவியை வணங்குவோர் தங்கள் பகைவரையும் தடைகளையும் வெல்லுவர் என்றும், திருமகளிடத்திலிருந்து செல்வமும், கலைமகளிடமிருந்து கல்வியும், முருகனிடமிருந்து வலிமையும், விநாயகரிடமிருந்து வெற்றியும், தேவியிடமிருந்து வீடும் பெறுவார்கள் என்றும் சொல்லப்படுகிறது. புரட்டாசி மாதத்தில் அதிக ஆர்வத்துடனும் பெருமையுடனும் இப்பூஜை நடத்தப்படும்.

இன்னெரு கதையும் வழக்கில் உண்டு. சிவபிரான் தேவியான சதி, தட்சன் வேள்வியில் தன் உடம்பை விடுத்து இமவானுக்கும் மேனைக்கும் மகளாகப் பிறந்தாள். பார்வதி என்று பெயர் பெற்ருள். இவள் தன் தவவலியால் சிவனையே மணந்து கைலையில் வசிக்கத் தொடங்கினுள். தன் மகளைப் பிச்சைக்கு உழலும் பெரும் பித்தனுன சிவன் நன்ருக நடத்தவில்லை யென்று மேனை வருந்தினுள். தன் தாயின் வேண்டுகோளுக்கிணங்கிப் பார்வதி தன் குழந்தைகளுடன் மண்ணுலகில் தாய் வீடு வந்தாள். அங்கு மூன்றுநாள் தங்கினுள். பார்வதி தங்களிடையே தங்குவது பற்றித் தாயும் மண்ணுலக மக்களும் மிக மகிழ்ந்து, அவளை மனம்பொருந்தி வணங்கினர். ஏழையர்க்கும் அடியார்க்கும் அன்ன மிட்டனர், ஆடினர், பாடினர். தேவி பிறந்தகம் வந்து உறவினருடனும் பக்தர்களுடனும் தங்கியிருந்தலை நவராத்திரியின் 7, 8, 9 ஆம் நாட்களில் கொண்டாடுவதுதான் துர்க்கை பூஜையின் விளக்கம். பூஜை முடிந்தபின் நான்காம் நாள் உலக மாதா கைலை திரும்புகிருள். அந்நாள் விஜயதசமி. அன்று தேவியின் உருவமும், அவள் குழந்தைகளின் உருவங்களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, ஆற்றிலோ, குளத்திலோ, கடலிலோ விடப்படும். இந்தப் புனிதமான நாளில் மக்கள் தங்கள் பழம் பகையை மறந்து புது வாழ்வு தொடங்குவார்கள்.

கலைக்களஞ்சியம்.

---

## நான் கண்ட பாரதி

(12 ம் பக்கத் தொடர்ச்சி)

**உயிர்களெல்லாந் தெய்வமன்றிப் பிற வொன்றில்லை ;**
**ஊர்வனவும் பறப்பனவு நேரே தெய்வம் ;**
**பயிலுமுயிர் வகை மட்டுமன்றி யிங்கு**
**பார்க்கின்ற பொருளெல்லாந் தெய்வங் கண்டீர்,**
**வெயிலளிக்கு மிரவி, மதி, விண்மீன், மேகம்**
**மேலுமிங்கு பலபலவாந் தோற்றங் கொண்டே**
**இயலுகின்ற ஜடப்பொருள்க ளனைத்துந் தெய்வம்**
**எழுதுகோல் தெய்வமிந்த எழுத்துந் தெய்வம்**

என்ற கொள்கை, நம் நாட்டுப் பழைய தீர்க்கதரிசிகளின் எண்ணங்களோடு எவ்வளவு ஒற்றுமையுடையதாயிருக்கின்றது. இன்று கீழ் நாட்டிலும், மேல்நாட்டிலும், மனிதர் உணவை மனிதர் பறிக்கும் கொடுமை நிகழ்ந்து வருகின்றது. அதைக் கண்டு குமுறுகிருர் பாரதி.

**இல்லையென்ற கொடுமை—உலகில்**
**இல்லையாக வைப்போம்**
**தனி மனிதனுக் குணவில்லையெனில்**
**ஜகத்தினை அழித்திடுவோம்**

என்றெல்லாம் அவர் பாடும்போது—நாடெல்லாம் எத்தகைய சமதர்மக் கொள்கை நிலவவேண்டும் என்று அவர் விரும்புகின்ருர் என்பது தெரியவரும்.

**சிந்து நதியின் மிசை நிலவினிலே**
**சேரநன் நாட்டிளம் பெண்களுடனே**
**சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்**
**தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்**

என்பதுதான் பாரதி கண்ட கனு: நாடுகளை மலைகளாலும், நதிகளாலும் இன்னும் பாஷைகளாலும் வரையறுத்து, வேறுபடுத்துவதை வெறுத்த பாரதி இந்திய மக்கள் ஒற்றுமையுடையவர்களாய் யாதொருவித பேதமுமின்றி வாழவேண்டுமென்று எவ்வளவு தீர்க்க தரிசனத்துடன் கூறுகிருர்.

நான் கண்ட பாரதி, ஒரு பெரிய கவி; ஒரு சிறந்த தேச பக்தர்; ஒரு ஒப்பற்ற சுதந்திர வீரர்; ஒரு அரிய தீர்க்கதரிசி என்பது வெளிப்படை.

**நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்**
**இமைப்பொழுதும் சோரா திருத்தல்—உமைக்கினிய**
**மைந்தன் கணநாதன் நம் குடியை வாழ்விப்பான்**
**சிந்தையே இம்மூன்றுஞ் செய்**

என்பது என்ன அழகான பிரார்த்தனை. இப்படிப் பட்ட பிரார்த்தனை செய்தவர், நான் கண்ட பாரதி.

# சுப்பிரமணிய பாரதி

பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை

சுப்பிரமணிய பாரதியார், அடிமையிருளின் முடிவு காணது, தேசம், மொழி என்ற உணர்ச்சி சற்று மின்றி நீண்ட உறக்கத்திற் கிடந்த தமிழ் நாட்டைத் தட்டி யெழுப்பிய பூங்குயில். மழலைத் தமிழ்மொழி யால் இசைமிக்க கவி தந்த, பழைய காலப் புல வரினின்றும், பாரதியார் மாறுபட்டு, உறங்கும் உளத்தை விழித் தெழச் செய்யும் பாக்களைச் சொரிந் திருக்கிருர். ஆகவே, விநாயகர் நான் மணிமாலை யில், அவர் விநாயகனை நோக்கி,

"தீயே நிகர்த் தொளி வீசுந் தமிழ்க்கவி செய் குவனே" என்று பாடினர். தீ நிகர்த்து ஒளி வீசுஞ் சொற்களினலேதான் அவர் உறங்குஞ் சமு தாயத்தை எழுப்பும் மந்திர சக்தி பெற்றுர். வங் கத்திலிருந்து வேத கர்ச்சனை செய்த சிங்கமாகிய சுவாமி விவேகானந்தர், புல்லாங்குழலையும் மெல் லிசையாழையும் ஒதுக்கி விட்டு, டமருகத்தையும் முரசையும் முழக்கி, தாமத குணத்தில் மூழ்கி யிருந்த மக்களுக்கு, போதிய எழுச்சி யூட்டவேண்டு மென்று முழங்கினர். அவ்விவேகானந்தர் பரம் பரையைச் சேர்ந்தவர் பாரதியார். ஆங்கில மாதா கிய சகோதரி நிவேதத்தை என்னும், விவேகானந் தரின் ஞான புத்திரியையே, பாரதியார் தமது குருவாகக் கொண்டவர். பரம்பரை வழி மாரு தாகையினல் பாரதிக்கும் ஆவேச மூட்டும் பாடல் கள் உளத்தினின்றும் பொங்கிப் பீறி வருவது இயற்கையே!

பாரதியாரை, தமிழ்நாடு பொதுவாகத் தேசீய கவி யென்றே சொல்லி வந்தது; இன்றும் சொல்லு கிறது! அவர், தேசீய கவியாக மாத்திரம் இருந் திருந்தால், தேச விடுதலையுடன், அவர் பாடல் களுக்கும் முடிபேற்பட்டிருக்கும். ஆனல், அன்று அக்கவிகளுக்கிருந்த மதிப்புக்குச் சற்றுங் குறையாத மதிப்பு, இன்றும் இருந்து கொண்டேதான் இருக் கிறது! இனிமேலும் இருக்கும்! ஆகவே, பாரதி யார் எக்காலத்துக்கும் உரிய ஒரு பெருங்கவிஞ ராகிருர்!

கவிதை வெறி மிஞ்சியே, இக்குயில் புதுவைச் சிறைக்குள்ளிருந்தும், ஊக்கங் குன்ருது, நிறைந்த காந்த சக்தி கொண்ட பாக்களைப் பொழிந்தது! கவிதை வெறியின்றேல், பாக்களில், துடிதுடிக்கும் இயல்பு, காண்பதரிதாகும். அக்கவிகளில் நாம்வெறும் யாப்பைத்தான் காணலாம்; உயிர் நாடியை அங்கு காணமுடியாது!

**"முன்னிக் கவிதை வெறி மூண்டே நனவழியப்**
**பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்**
**நெட்டைக் கனவி னிகழ்ச்சியிலே"**

காணுதன வெல்லாங் கண்டே, பாரதியாகிய மேகம் குமுறி மழை பொழிந்தது. கவிதைப் பேறு கிடைக் கும் இந்த அருள் நிலையை, இவ்வகையில் வேறு எந்தக் கவியுமே வெளிப்படுத்தவில்லை! பாரதியா ரின் குயிற் பாட்டில் மாத்திரமன்றி, இக்கவிதை வெறி, கற்பனைச் சிகரமாகிய ஞானரதத்திலும் ஊடு ருவி நிற்கிறது! வறுமைத்துன்பமுஞ் சிறையுங் கூட, பாரதியின் உள்ளத்துடிப்பை தடுக்கமுடியா திருந்ததற்குக் காரணம், எல்லை மீறிய இக்கவிதை வெறியே!

பாரதியின் உள்ளம் அகண்டமானது. அதிற் சிறு மைக்கே இடமில்லை. ஆகையால் அவர் பாரத தேசத்தை நோக்கும் போது, அது பராசக்தியாகவே தோற்ற மளிக்கிறது! அவர் தேசத்தின் வெறும் இயற்கை யழகைப் பெரிதும் பொருட்படுத்தாது, பாரத தேசத்தின் உயிர் நாடியைக் கண்டு பெரு மிதங் கொண்டு

**"மன்னு மிமய மலை யெங்கள் மலையே**
**மாநில மீதது போற்பிறி திலையே**
**இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே**
**இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே"**

**"பன்னரு முபநிட நூலெங்கள் நூலே**
**பார்மிசை யேதொரு நூலிது போலே"**

என்று கூறு மாற்ருல், பாரத தேச ஞானம், பார் முழுவதற்கும் பொதுவான ஞானமென்று எக்களிப் புக் கொள்ளுகிருர்.

உடல் தோற்றத்திலிருந்து உண்மையான அகத் தோற்றத்துக்கு, பாரதியை வழிநடத்தியது இறைவ னருள்தான்.

அவனருளே கண்ணுகக் காணும் அடியார் வரிசையில் தம்மையுஞ் சேர்த்து அருள் புரியுமாறு பாரதியார் கோவிந்தனுக்கு விண்ணப்பிக்கிருர். ஆழ்வார்களுக்கு அருள் செய்த அக்கண்ணன், பாரதியாருக்கு அருள் பொழிந்திருத்தலைப் பாரதியாருடைய கோவிந்தன் பாட்டுக் காட்டும் !

"எளியனேன் யானெனலை எப்போது
போக்கிடுவாய் இறைவனே யிவ்
வளியிலே பறவையிலே மரத்தினிலே
முகிலினிலே வரம்பில் வான
வெளியிலே கட லிடையே மண்ணகத்தே
வீதியிலே வீட்டிலெல்லாம்
களியிலே கோவிந்தா, நினைக் கண்டு
நின்னேடு நான் கலப்ப தென்றே ?"

"என் கண்ணை மறந்துனிரு கண்களையே
யென்னகத்தில் இசைத்துக் கொண்டு
நின்கண்ணுற் புவியெல்லா நீயெனவே
நான் கண்டு நிறைவு கொண்டு
வன்கண்மை மறதியுடன் சோம்பர்
முதற் பாவமெலா மடிந்து நெஞ்சிற்
புன்கண் போய், வாழ்ந்திடவே கோவிந்தா
எனக் கமுதம் புகட்டுவாயே"

இக் கோவிந்தன் கண்ணுல், அவர் தமிழ் நாட்டின் தென் முனையாகிய குமரியைப் பார்க்கிருர். நீலக் கடற் பரப்பில், இக்குமரி நித்தந் தவஞ் செய்கிருளாம். தமிழினிமை கனியுந் தாயிடமிருந்து, இக் குமரியைக் கடல் பிரித்து விடுகிறதாம். உதவியற்ற குமரி, தாயினைப் பெறத் தவித்தபடியே நிற்கிருள். கடலின் உவர்ப்பு, தமிழின் இனிமையைக் கெடுக்க முடியாதிருக்கிறது. அதனுல் தமிழ்த்தாயும் குமரி மகளும் ஒன்ருகச் சேர்ந்திருக்க விரும்புவதை, பாரதி கற்பனைக் கண்ணுல் கண்டு சித்திரந் தீட்டுகிருன். இதோ அச் சித்திரம் :

"நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தந் தவஞ் செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு"

வானுலகத்திற்கு என்றுமே ஒரு பெரும்புகழ் உண்டு. அதற்குக் காரணம் அதனிடமுள்ள இனிய அமிழ்தமே. தமிழென்னும் பாற்கடலில், வள்ளுவன் குறள் அமிழ்தமாகும். வள்ளுவன் என்று குறள் செய்தானே அன்றைக்கே வானுலகின் புகழ் அழிந்தொழிந்தது. வானுலகத்தின் அமிழ்தெல்லாம் குறளிற் குடி கொண்டு விட்டது. இதனையே பாரதி

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு"

பாரதியின் உள்ளம் வள்ளுவனைப் புதுமைக் கண்ணுற் பார்க்கிறது. அந்த விரிந்த உள்ளம், வள்ளுவனை தமிழ் நாட்டுக்குள் அடக்கி வைக்க விரும்பவில்லை. அது வள்ளுவனை உலகுக்கே ஈந்து விடுகிறது.

பாரதியார் இதுவரையும் மற்றக் கவிகள் காணுத முறையில் தமிழ் அன்பால் கவி செய்கிருர். கவிக்கு உயிர் கொடுக்க, அவர்

"நாத வார்கடல் இன்னெலியோடு
நற்றமிழ்ச் சொல் இசையையுஞ் சேர்ப்பேன்"
என்கின்ருர்.

"இமைய வெற்பின் மோத இசைள் பாடி வாழ்
வேன்"
என்கின்ருர்.

"நிலாவையும் வானத்து மீனையுங் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவு மமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறி படைத்தோம்"

என்று கூறுவதோடு நின்று விடாது

"பொய்க்குங் கலியை நான் கொன்று பூலோகத்
தார் கண் முன்னே
கொணர்வேன் கிருதயுகத்தினையே" என்றும்,

"இல்லை யென்ற சொல்லை உலகில் இல்லையாக
வைப்பேன்"

என்றும் பாடி விடுகின்ருர்.

மேலே காட்டிய புதுமைக் கருத்தோடு,

"கருதிக் கருதிக் கவலைப்படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல்" என

மோனை நயமும் அமைத்துப் பாடுகிருர்.

" காற்றடிக்குது கடல் குமுறுது
கண்ணை விழிப்பாய் நாயகனே
தூற்றல் கதவு சாளர மெல்லாந்
தொளைத்தடிக்குது பள்ளியிலே " என

எதுகைச் சிறப்புங் காட்டுகிறார்.

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கும் மடமையைக் கூறி உவமையின் சிகரத்தை அடைகிறார். இவைகளோடு கவிதைக்கே உயிர் நாடியான உணர்ச்சிப் பெருக்கை, பாஞ்சாலி சபதத்திலே,மாலை வருணனை என்ற பகுதியில், ஒளி வீசும் மாணிக்கம் போல அள்ளி அள்ளி, உள்ளங் களிக்கத் தருகிறார். இதோ அந்த நற்காட்சி :

" பார் ! சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன ! ஓகோ
என்னடீ யிந்த வன்னத் தியல்புகள் !
எத்தனை வடிவம் எத்தனை கலவை
தீயின் குழம்புகள் !—செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள் ! வெம்மை தோன்றுமே
எரிந் திடுந்தங்கத் தீவுகள் !—பாரடீ !
நீலப் பொய்கைகள் !—அடடா நீல
வன்ன மொன்றி லெத்தனை வகையடீ !
எத்தனை செம்மை பசுமையுங் கருமையும்
எத்தனை !—கரிய பெரும் பெரும் பூதம் !
நீலப் பொய்கையின் மிதந்திடுந் தங்கத்
தோணிகள் ! சுடரொளிப் பொற்கரை யிட்ட
கருஞ்சிகரங்கள் !—காணடீ, ஆங்கு
தங்கத்திமிங்கிலம் தாம்பல மிதக்கும்
இருட்கடல் ! ஆஹா ! எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள் ! ஒளித்திரள் ! வன்னக்களஞ்சியம் !"

பாரதியின் பாடலில் நகைச் சுவைக்குப் பஞ்சமேயில்லை. குயிற் பாட்டில், குரங்கையும், எருதையும் பற்றி வரும் பகுதிகள் பாடிப் பாடிச்சிரித்து மகிழ வேண்டியவை. " தூண்டிற் புழுவினைப்போல்" எனத் தொடங்கும்,—கண்ணன் என் காதலன்—பாடலிலும், லஜபதிராய் பிரலாபத்திலும், ஊழிக் கூத்திலும் மெய்ப்பாடு நிறைந்து கவிதாரஸம் பொங்கிப் பிரவாகித்துப் பெருகி ஓடுவதை உணர்ந்து அநுபவிக்கலாம்.

பாரதியாருக்கு பாட்டிலுள்ள அவா மட்டுப்படுத்திச் சொல்ல முடியாதது. நாட்டுப் புறத்திலுள்ள நல்லமைவான இன்னேசைகளில் அவர், தன் நெஞ்சைப் பறிகொடுத்து விடுவார். ஓசை, இசை, ஒலி, ஓலம், பண் என்ற அருமையான சொற்கள் ஒருங்கு சேர்ந்து வர அவர் இசைக்கும்

" கானப் பறவை கலகலெனு மோசையிலும்
காற்று மரங்களிடைக் காட்டு மிசைகளிலும்
ஆற்று நீ ரோசை அருவி யொலியினிலும்
நீலப் பெருங்கட லெந்நேரமுமே தானிசைக்கும்
ஓலத்திடையே யுதிக்கு மிசையினிலும்
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினல்
ஊனுருகப் பாடுவதி லூறிடுந்தேன் வாரியிலும்
ஏற்ற நீர்ப் பாட்டினிசையினிலும், நெல்லிடிக்குங்
கோற்றெடியார் குக்குவெனக் கொஞ்சு மொலியினிலும்
சுண்ணமிடிப்பார் தஞ் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகு பல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டியிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணை முதலா மனிதர்
வாயினிலுங்கையாலும் வாசிக்கும் பல் கருவி
நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றெலிக்கும்
பாட்டினிலும், நெஞ்சைப்பறிகொடுத்தேன் பாவியேன் "

என்ற பாடல் அடிகள் நம்மையுமே மயக்கிவிடுகின்றன !

பாரதி பெரிய கவி. ஆனல் குழந்தைகளுக்கோ நல்ல குரு. பசுவையும் நாயையும் கோழியையும், காக்கையையும் குழந்தைகளின் கூட்டாளிகளாக்குகிறார். குழந்தைகளை ஓயாமல் ஓடியாடி விளையாடத் தூண்டுகிறார். நல்ல மனே தத்துவ நிபுணராகையால், காலை யெழுந்தவுடன் படிப்பு வேண்டும் என்கிறார். காலை முழுதும் படித்தால் அலுப்புத் தட்டும் அல்லவா ? அங்ஙனஞ் சலிப்பேற்படாமல் பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு வேண்டு

(21 ம் பக்கம் பார்க்க)

# ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கோயில் வரலாறு

நல்லூர் வண. சுவாமி ஞானப்பிரகாசர்

கோடி அற்புதரும் திருநாக்கழியாதவரும் எங்கெங்கும் மங்காப்புகழ் பெற்றவருமான அர்ச். பதுவை அந்தோனியாருடைய ஏழாம் சகாப்த வைபவம் திருச்சபை முழுதிலும் கொண்டாடப்படுகின்ற இந்த வருஷத்தில், ஊர்காவற்றுறையின் புராதன சத்தியவேத ஆலயங்களுள் ஒன்றாகிய அர்ச். அந்தோனியார் கோயிலின் சரித்திர வரலாற்றை எழுதித் தரவேண்டுமென்று அக்கோவிலுக்குச் சேர்ந்த பிரபுக்கள் சிலர் என்னைக் கேட்டுக்கொண்டதற்கு இசைந்து இச்சிறு வரலாற்றை வரைகின்றேன்.

### சத்தியவேத ஆரம்பம்

தற்காலம் ஊர்காவற்றுறை என்று அழைக்கப்படுகின்ற துறைமுகத்தைக்கொண்ட தீவிற்கு, பழங்காலத்திலே தணதீவு என்ற சிங்களப்பெயர் வழங்கி வந்தது. அதின் பிரசித்திபெற்ற துறைமுகம் சிங்களத்தில் ஊருதொட்ட எனவும், தமிழில் ஊருத்துறை எனவும் சொல்லப்பட்டது. ஆயினும், தமிழ்ப் பண்டிதர்கள் பன்றித்துறை என்று அர்த்தமுள்ள ஊருத்துறைக்கு வேறொரு தமிழ் அர்த்தம் கற்பித்து, ஊர்காவற்றுறை என்று எழுதுவோர் ஆனார்கள். போர்த்துக்கேயர் காலத்தில் துறைமுகம் என்ற கருத்துள்ள கயெஸ் என்ற போர்த்துக்கேய பாஷைப் பெயர் இதற்கு வழங்கிற்று. கயெஸ் என்று அழைக்கப்பட்ட துறை, உள்ளபடி இத்தீவில் அல்ல, காரைதீவில் இருந்தது. அது இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு யானைகளை ஏற்றி அனுப்பும் துறைமுகம். யானை ஏற்றிய செய்கரைப் பாலம் கிடந்த நிலையத்தை இராசாவின் தோட்டம் என்ற இடத்திலே இன்றைக்கும் காணலாம். தொடக்கத்தில் காரைதீவுக்கு வழங்கியபெயர் பிற்காலம் அதன் எதிரிலுள்ள ஊர்காவற்றுறைக்கு வரலாயிற்று. அதுதான் இன்றைக்கு இங்கிலீஷில் கயிற்ஸ் (Kayts) என்று சொல்லப்படுவது. உலாந்தாக்காரர், தீவு முழுதினையும் தங்கள் தேசத்திலுள்ள ஒரு பெயரினால் இலயிடன் தீவு என்றார்கள்.

இவ்வாறாகப் பல பெயர்ப்பெற்ற தீவின் துறைமுகத்துக்கு அருகிலே ஆயிரத்து அறுநூறாம் ஆண்டு பேதுறு தெ பெற்றன்கோர் எனும் பிரான்சிஸ்கன் சபைக்குருவானவர் ஒரு சிலுவையை நாட்டி, அதற்கு அணிமையில் ஒரு சிறு கொட்டிலும் போட்டுக் கொண்டிருந்து ஊரவர்களுக்கு வேதம் போதிக்கத் தொடங்கினார். அக்காலம் ஊர்காவற்றுறைப் பகுதி ராசகுமாரர்களுள் ஒருவருக்குச் சொந்தமாயிருந்தமையால், நல்லூரிலிருந்த யாழ்ப்பாண அரசனாகிய எட்டாம் பரராசசேகரன் (1591-1616) புதிதாய் நாட்டப்பட்ட சிலுவையைப் பிடுங்கி கடலுள் எறிந்துவிடும்படி சில சேவகர்களை அங்கு அனுப்பினான். பெற்றன்கோர் சுவாமியார் சிலுவையைக் கட்டித் தழுவிக்கொண்டு, "சுத்தமான சிலுவையே! நான் இவ்விடத்தில் உன் அரவணைப்பிலே இரத்தஞ்சிந்தி மரிக்க எனக்குக் கிடைக்குமோ" என்று கூவ, சேவகர்களை இட்டுக்கொண்டுவந்த ஆராய்ச்சியானவன் இதைக்கண்டு சுவாமியாருக்கும் சிலுவைக்கும் ஒரு தீங்குஞ் செய்யாமல்விட்டு, வந்த வழியே மீண்டான். இச்சிலுவை இருந்த இடம், தற்காலச் செய்கரைப் பாலத்துக்கு நேரே இரேகுக் கட்டிடமும் அரசினர் வாடிவீடும் இருக்கிற நிலையம்போலும். சிலுவை நின்ற இடத்திலேதான் ஆயிரத்து அறுநூற்றுப் பதினாலாம் ஆண்டளவில் ஸ்நாபகயுவானியார் கோயிலுக்கும் அதனோடு சேர்ந்த பிரான்சிஸ் குருமார் மனை அல்லது மடத்துக்கும் அத்திவாரம் இடப்பட்டது. பழைய கட்டிடங்களின் அத்திவாரங்களை முன் சொல்லிய வாடிவீட்டு வளவுக்குள்ளும் அதற்குக் கிழக்கேயும் இன்றைக்குங் காணலாம். பாலத்தினின்று கரம்பனை நோக்கிச்செல்லும் பெரிய தெரு, கிழக்கு மேற்காய்க்கிடக்கிற அத்திவாரங்களின் ஊடே தெற்குமுகமாய் பிளந்து கொண்டுபோகின்றது.

கண்ணாடிச் சுவாமியார் என்று அழைக்கப்பட்ட பேதுறு தெ பெற்றன்கோர் என்றவரே ஊர்காவற்றுறையில் முதன்முதல் வேதத்தைப் போதித்தவராம். இவரே யாழ்ப்பாணத்தில் இப்போதுகோட்டை இருக்கிற நிலையத்திலே முதல்முதல் வெற்றி மாதா கோயிலையும், அரிப்பு, நானாட்டன், பெருங்களி, சித்தவெளி, பூநகரி முதலிய இன்னுஞ் சில இடங்களின் கோயில்களையும் அடியிட்டவர். ஊர்காவற்றுறை சஞ்சுவாம் கோயில் கட்டிமுடியப் பத்து வருஷஞ் சென்றது. அதன் மடம் இரண்டடுக்குள்ளதாயும், யுத்த காலத்திலே கோட்டையாக வழங்குதற்கு இருமருங்கும் கொத்தளங்கள் கொண்டதாயும் இருந்தது. யாழ்ப்பாண நாட்டில் வேத விருத்திக்காக அதிகம் உழைத்தவர்களுள் ஒருவரான பெற்றன்கோர் சுவாமியார், ஊர்காவற்றுறையாரை வேதத்தில் உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு தலையாரி வீட்டிலிருந்தும் ஒவ்வொரு மகனை எடுத்து வளர்த்து வேத சத்தியங்களை அப்பாலியர்

களுக்கு விசேஷ விதமாய்ப் பயிற்றிக்கொண்டு வந்தாரென்று சரித்திரங்களில் வாசிக்கின்றோம். போர்த்துக்கேயர் காலத்திலே, ஊர்காவற்றுறைப் பகுதிக்கெனக் கட்டப்பட்ட இந்தப் பெரிய கோயிலைத்தவிர இலயிடன் தீவிலே, வேலணையில் ஒரு கோயிலும், அல்லைப்பிட்டியில் ஒரு கோயிலும் எழுப்பப்பட்டன. அல்லைப்பிட்டிக் கோயிலின் சுவர்கள் இடிந்தபடி இன்றைக்கும் நிற்பதைக்காணலாம். வேலணை ஆலயம் தரைமட்டமாகிவிட்டது. அதுபோலவே சவேரியார் சபித்தது என்று சிலர் அறியாமற் சொல்லுகின்ற காரைதீவு ஆரோக்கியமாதா கோயிலும் இன்றைக்கும் அத்திவாரம் மட்டும் காணப்படுவதாய்க் கிடக்கின்றது. இக்கோயில் வளவு இங்கிலீஷ் அரசினரால் அமெரிக்கன் புறெட்டெஸ்த்தாந்தர் வசம் ஒப்பிக்கப்பட்டு அங்கே அவர்களால் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்து நடத்தப்படுகிறது. களபூமித்தெருவால் போவோர் இக்கோயில் வளவை எளிதாய்க் கண்டு கொள்ளலாம். இதற்குச் சமீபத்திலுள்ள சைவக் கோயிலை இன்றைக்கும் பெயர் மாறி மாதா கோயில் என்கிறார்கள்.

இது நிற்க, ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்தெட்டாமாண்டு உலாந்தாக்காரர் என்று சொல்லப்படுகிற ஒல்லாந்தர் படையெடுத்து வந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக்கொண்டு போர்த்துக்கேயரைத் துரத்தி விடவே, சத்தியவேதக்காரர் குருமாரின்றி கோயிலின்றி வருந்துவோரானார்கள். அவர்களுடைய கோயில்களெல்லாம் ஒல்லாந்தர் கைப்பட்டுவிட்டன. குருமாரை அணைத்து வைப்போருக்கும் சிரச்சேதம் என்ற கட்டளை பிறந்துவிட்டது. அதனால் சத்தியவேத கிறீஸ்தவர்கள் இரகசியமாகவே தங்கள் வேதக்கடமைகளைச் செலுத்தவேண்டியவர்களானார்கள். ஆயினும், ஒல்லாந்தருடைய மரணத்தண்டனைக்கும் அஞ்சாமல், ஆயிரத்து நூற்று எண்பத்தேழாம் ஆண்டு தொடக்கம், யோசேவ்வாஸ் முனீந்திரன் எனும் பூச்சியமுள்ள கோவைக் குருவானவரும் அவரை அடியொற்றி வந்த மற்றும் கோவை குரு உத்தமர்களும் மறைந்து மறைந்து அங்கங்கு கிறீஸ்தவர்களுடைய வீட்டு உட்சார்களிலே பூசை வைத்து தேவதிரவிய அனுமானங்களை நிறைவேற்றிக்கொண்டு வந்தார்கள். தங்களுடைய அழகான பெரிய பெரிய கோயில்களையெல்லாம் ஒல்லாந்த புறெட்டெஸ்தாந்தருக்கு பறிகொடுத்துவிட்ட கிறீஸ்தவர்கள், தேவாராதனைக்காக எங்கேயாவது பிரசித்தமாய் கோயில் கட்டமுடியாமல் இருந்தது. இப்படியிருந்துவரும் நாளில், ஒல்லாந்த அரசாட்சியார், இலங்கைத்தீவிலே சத்தியவேதத்தை இல்லாமற் பண்ணிப்போட தாங்கள் ஒரு நூறு வருஷத்திற்கு மேலே பண்ணின பிரயத்தனங்கள் எல்லாம் வீணாய்ப்போனதையும், இருபது முப்பது கோவைக் குருமார் தங்கள் உக்கிரமான கட்டளைக்கும் மாறாய் இலங்கையெங்கும் திரிந்து வேதத்தை அதிகமதிகமாய் விருத்தியாக்கிக்கொண்டு வருகிறார்களென்பதையுங் கண்டு, ஆயிரத்து எழுநூற்று எழுபத்து நாலாம் ஆண்டு கத்தோலிக்க சத்திய வேதக்குருமாருக்கு சற்றே சுயாதீனங் கொடுத்தார்கள். ஒல்லாந்தர் அரசுக்கு மாறாகத் தாங்கள் யாதொன்றுஞ் செய்வதில்லையென்று சத்தியவாக்குச்செய்து கையெழுத்துக் கொடுக்குங்குருமார் பிரசித்தமாய் வேதத்தைப் போதிக்கலாம், தேவாராதனை நடத்தலாம் என்று உத்தரவு செய்தார்கள். ஆயினும், மெய்விவாகத்தை அரசினரால் நியமிக்கப்பட்ட சட்டம்பிமாரே நிறைவேற்ற வேண்டும் என்பது முதலான சில அநியாயச் சட்டங்களை மாற்றி விடவில்லை.

இப்படியே 1774 ம் ஆண்டு தொடக்கந்தான் கிறிஸ்தவர்கள் கொட்டில்களாயாவது தேவாலயங்களைக் கட்டத் தொடங்கினார்கள். இவர்களுள் இலயிடன்தீவுக் கிறிஸ்தவர்கள் போர்த்துக்கேயர் காலந்தொட்டே வேதத்தைக் கைவிடாமல் உயிரிலும் அருமையாக் காப்பாற்றியிருக்கின்றவர்களாகத் தோற்றுகின்றபடியால், பிற இடங்களில் பழங்கிறீஸ்தவர்கள் கொட்டிற் கோயில்களைப் போடத்தொடங்கினபொழுது தாங்களும் அப்படிச் செய்திருப்பார்களென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கோயிலும் அப்படியே தொடங்கிற்றென்பதற்கு சந்தேகமில்லை.

இக்கோயிலுக்குச் சேர்ந்த மகா குலக்கமண்டலர்கள் எங்கிருந்து வந்தவர்கள்? எப்போ வந்தவர்கள்? என்று விளங்கவில்லை. ஆயினும், இவர்கள் தென் இந்தியாவிலும் மன்னாரிலும் தங்கள் குலத்தவர்கள் சத்தியவேதத்தைத் தழுவிக் கொண்ட காலத்தை, அதாவது இந்தியாவின் அப்போஸ்தலராகிய அர்ச். பிரான்சிஸ்கு சவேரியாருடைய நாட்களை (1542–1552), அடுத்துத்தொடுத்தே வேதத்தில் சேர்ந்திருப்பார்களென்று வைத்துக்கொள்ளலாம். அப்படியாயின், இவர்கள் 1600 ம் ஆண்டுக்குப்பின் இங்கு வந்தவர்களாதல் வேண்டும். அல்லது பெற்றன்கோர் சுவாமியார் காலத்திலும் இங்கிருந்தவர்களானால் அவரால் ஞானஸ்நானம் பெற்றிருப்பார்கள். ஆயினும் பல ஏதுக்களைக்கொண்டு பார்க்கும் போது, இவர்கள் பிற்காலம் மாதோட்டத்தில் நின்று வந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. எல்லாரும் அல்லாவிடினும் ஒரு கட்சியாராவது ஒரு காலம் வேலணையைச்சார்ந்த சாட்டியில் குடியிருந்து பின் இங்கு வந்தவர்கள் என்பது நிச்சயம். சாட்டி ஒரு

நாள் சிறந்த துறைமுகமாயிருந்தது. ஆதிநாட் தொட்டு வேளாண்மையையே தம் குலத்தொழி லாகக் கொண்ட இக்குலத்தவர்கள் அங்கு வசித் திருந்து, அப்பால் சீவிய விருத்திக்காக ஊர்காவற் றுறையில் குடியேறினர்கள் போலும். இங்கு வந்தபின் இவர்கள் கப்பல்களிற் கீழ் உத்தியோகங் கள் வகித்தும் படிப்படியாய் கப்றின் முதலிய பொறுப்பான பணிவிடைகளில் அமர்ந்தும் வருவோ ராஞர்கள். இவர்களுக்கு அருமை பெருமையாய் விளங்குகிற தற்காலக்கோயிலில் இன்றைக்கும் அதி பூச்சியமாய் காப்பாற்றப்பட்டு வருகிற அந்தோனி யார் சுரூபத்தைப்பற்றி ஒரு வரலாறு பாரம்பரிய மாய்ச் சொல்லப்படுகிறது. அதெப்படியென்றல், போத்துக்கேயரின் பழைய கோயிலில் இருந்த சுரூபம் ஒன்று ஒல்லாந்தருடைய வேதகலாபனை நாட்களிலே காடாய்க்கிடந்த ஒரு இடத்தில் கொண்டுபோய் மறைத்து வைக்கப்பட்டதென்றும் பிற்காலம் விறகுவெட்டப்போன சிலர் ஒரு மரத்தைக் கொத் தும்பொழுது அதன் போறைக்குள் இருந்த சுரூ பத்தைக் கண்டார்களென்றும், சுரூபத்தின் தலே யிலும் ஒருகொத்து விழுந்து அந்த அடையாளம் இன்றைக்கும் இருக்கிறதென்றும், அந்தச் சுரூபத் தின் பேராலேயே முன் தொம்மையப்பர் கோயிலா யிருந்த இக்கோயில் அந்தோனியார் கோயில் ஆயிற் றென்றும் சொல்லுகிருர்கள். ஆதியில் தொம்மை யப்பர் கோயிலே நடத்திவந்தவர்கள் கடற்றெழில் உள்ள வேறெரு சாகியத்தார் என்றும் சொல்லப் படுகிறது. போத்துக்கேயர் காலத்தில் இந்தப்பகுதி புறம்போக்கான காட்டுப்பக்கம் என்றும், ஊர்மனே யிருந்த பக்கம் பழைய கோட்டையைச் சார்ந்த ஊருண்டிப்பகுதியே என்றும் தோற்றுகின்றது.

அர்ச். அந்தோனியார் கொட்டிற் கோயிலினிட மாக கற்கோயில் கட்டத் தொடங்கியது எப்போது எனத்தெரியவில்லே. முகப்புச்சுவரில் 1802 ம் ஆண்டு என்று குறிப்பு இருக்கிறபடியால் அத்தேதியி லேதான் கற்கட்டிடம் முடிந்தது என்று சொல்ல லாம். அப்படியாயின் அந்நாளில் விசாரணைக் குரு வாயிருந்தவர் கமில்லு பரைந்து எனுங் கோவைக் குருவானவராம். இந்தத் தொடர்பிலே, ஊர்காவற் றுறை மீசாமை பரிபாலித்துக்கொண்டுவந்த குரு மாரின் அட்டவணையை பழைய ஞானஸ்நான இடாப் புக்களின்படி இதன்கீழ்த் தருகின்றேம். ஊர்கா வற்றுறையில் சந்தியோகுமையோர் கோயிலும் தேவமாதா கோயிலும் கரம்பன் அர்ச். செவஸ்தி யார் கோயிலும் அர்ச். அந்தோனியார் கோயிலோடு ஒத்தகாலத்தவைகளாளுலும், இக்கோயிலேயே குரு மார் நூறுவருஷத்துக்குமேல் ஆசனக்கோயிலாக வழங்கியிருக்கிருர்கள் என்றது இங்கே கவனிக்கத் தக்கது.

---

## சுப்பிரமணிய பாரதி

(18 ம் பக்கத் தொடர்ச்சி)

மென்கிருர். படிப்பை யடுத்துப் பாட்டு வருவது தானே குழந்தைக்கு விருப்பமானது ; உற்சாக மளிப்பது ! காலேயில் படித்த பிள்ளேக்கு மாலேயில் படிப்பே தேவையில்லே. ''மாலே முழுதும் விளே யாட்டு என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா'' என்பது நல்லாசிரியஞகிய பாரதியின் நேர சூசி !

தாயே முதல் தெரிந்த தெய்வ மாகையால், " தமிழ்த்திரு நாட்டினைத் தாயென்று கும்பிடவேண் டும் " என்கிருர். " வடக்கில் இமயமலே பாப்பா, தெற்கில் குமரி முனே, கிழக்கும் மேற்கும் பெருங் கடல்." எனப் பாட்டிலே காட்டுவதால் வரண்ட பூமி சாஸ்திரம் குழந்தைக்குத் தித்திப்பான பாடமாகி றது. அவர்கள் மனதிலே தெய்வ நம்பிக்கையை இலேசாகப் பதிய வைக்கிருர். புதிய ஆத்திசூடிக் காப்பில் சிவனேயும் கண்ணனேயும் ஒன்ருகக் காட்டு கிருர். நபி நாயகத்தையும் யேசுநாதரையும் தெய் வந் தந்த திருக்குமாரர்களென்று சமரசத்துக்கு இடங் கோலி வைக்கிருர்.

பாரத தேசத்து மக்களுக்கு, ஆடுகளும் மாடுகளும் காணியும் நிலமும் கொடுக்கும்படி பராசக்தியை வேண்டும் பாரதி, தமக்கு சிறு தென்னஞ்சோலே யும், பக்கத்தில் கேணியும், முத்துச் சுடர்போல நிலாவொளியும், குயிலின் மெல்லிசையும், தென் றலின் அசைவும் போதுமென்கிருர் !

பாரதியாருடைய உள்ளத்து ஒளியிஞல் அவர் தம் வாக்கினில் ஒளி பளிச்சிடுவதைக் காண்கி ருேம். அவர் தம் பாடல்கள் உலகிலே மிக ஆச்சரியமானவை ! எங்குமில்லாதவை ! சிறு கவிகள் தந்த பாரதிதாமே, காப்பியமாகிய பாஞ் சாலி சபதமுந் தந்திருக்கிருர் ! இன்று அவர்தம் பாட்டுத் திறத்தாலே தமிழுலகம் உய்வடைந்திருக் கிறது ! ஞாயிறு, காற்று முதலாக பாரதியாருடைய செய்யுளிடையே மிளிரும் வசன பாகங்களில் பழைய வேத காலக் கவிதாரசம் மிளிர்கிறது. பாட்டும் வசன மும் தந்து தமிழ் நாட்டுக்கு வாழ்வு தந்த பாரதி நாமம் வாழ்க !

(வாஞெலிப்பேச்சு)

# வாழுங்கள் ஆரோக்கியமாக

திரு. மு. தவகணேசன்

இன்று நம் நாட்டு மருத்துவமனைகளுக்குச் சிகிச்சை பெறுதற்காகச் செல்வோரில் பெரும்பான்மையோர் தடைசெய்யக்கூடிய குடல் நோய்களினால் பீடிக்கப் பட்டுக் காணப்படுகிறார்கள் என்ற உண்மையை அறியும் போது, சுகாதார விதிகளை மக்கள் தம் தினசரி வாழ்க்கையில் கடைப்பிடித்து வந்தால் இவ்வித மான நோய்களுக்கு ஆளாகாமல் ஆரோக்கியமாக வாழ முடியுமென்ற மற்றொரு உண்மை புலனா கிறது. சுகாதார விதிகள் என்றவுடன் என்னமோ, ஏதோ, கஷ்டமான காரியமோ, கடைப்பிடிக்க முடி யுமோ என்றெல்லாம் எண்ணித் திகைப்போரும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவைகளை நன்கு அறிந்தோருக்கு அல்லது இவைகளைத் தம் தினசரி வாழ்க்கையில் கடைப்பிடித்து வருவோருக்கு இது ஒரு சிரமமான காரியமாகத் தோன்றாது.

### கதை

நடுத்தரமான குடும்பமொன்று வசித்துவரும் வீடு அது. அக்குடும்பத் தலைவன் வருவாயோ அவன் குடும்பத்தைச் சீராக நடத்துவதற்குப் போதுமான தாக இருந்தும் வறுமையும் பிணியும் அவர்க ளிடையே கோரத்தாண்டவமாடுகின்றன. காரணம் என்ன ? வாரத்தில் ஐந்து ஆறு தடவைகள் அக் குடும்பத்திலுள்ளவர்கள் ஒருவர் மாறி ஒருவராக வைத்தியரிடம் சென்று கொண்டிருந்தால் வறுமை யில் அவர்கள் வாடாமல் இருக்கமுடியுமா ? பிணி யுள்ள இடத்தில் வறுமை காணப்படுவது இயல்பே யாயினும் பிணியேற்படுவதற்கு, அதுவும் அடிக் கடியேற்படுவதற்குக் காரணம் என்னவென்பது ஒரு புரியாத புதிராக இருக்கிறது அக்குடும்பத் தலைவனுக்கும் அவன் இல்லாளுக்கும். அவர்களுக்கு மட்டுமல்ல; அவர்களுக்கு அடிக்கடி சிகிச்சையளித் துக் களைத்துப்போயிருக்கும் வைத்தியருக்கும்கூட இது ஒரு புதிராகவே இருக்கிறது.

### மர்மம்

அவர்கள் விளங்கிக் கொள்ளத் தவித்துக்கொண் டிருக்கும் புதிருக்குக் காரணம் இதுதான். அதா வது, அக்குடும்பம் குடியிருக்கும் வீடோ இரண்டு அறைகளைக்கொண்டிருக்கிறது. ஒரு அறையைத் தம் படுக்கையறையாகவும் மற்றொன்றைத் தம் சமைய லறையாகவும் பாவித்து வருகிறார்கள், அவர்கள். படுக்கையறைக்கு ஒரேயொரு யன்னல். அதையும் இரவில் படுக்கும்போது மூடிவிடுகிறார்கள். கதவை யும் அப்படியே. கணவன், மனைவி, நான்கு பிள்ளை கள் ஆக மொத்தம் ஆறு பேர்கள், காற்றுப் புக முடியாது நன்கு பாதுகாப்பாக அடைக்கப்பட்ட அறை யில் தினசரி எட்டு மணித்தியாலங்களுக்கு மேலாக அடைந்து கிடக்கிறார்கள். ஒருவர் சுவாசித்து வெளி விட்ட அசுத்தமான காற்றை ஏனையோர் சுவாசிக் கின்றனர். அறை முழுவதும் அசுத்தமான காற்றே நிரம்பியிருக்கிறது. காலையில் எழுந்து வருகிறார் கள் எல்லோரும், கண்களெல்லாம் சிவந்து, முகம் வீங்கி, உடல் வெளுத்து, மூச்சுத்திணறி. இந்த அறிகுறிகளை அவர்கள் சட்டை செய்வதில்லை. அவர் களது தினசரி வாழ்க்கையில் இவைகள் காணப்பட்டு வருவதனால் அவர்களுக்கு இவைகள் நன்கு பரிச்சய மாகி விடுகின்றன. அவர்கள், குறிப்பாக, பிள்ளைகள் உடல் நலிந்து, உடல் வெளுத்தும் காணப்படுகிறார் கள். அவர்களுக்கு இரத்த சோகையோவென்று ஐயுற்ற வைத்தியர் அதற்கான மருந்துகளைக் கொடுத் தும் அவர்களின் நிலையில் மாற்றம், அதாவது முன்னேற்றம் காணப்படாததனால் தம் மூளையைப் போட்டுக் குளப்பிக்கொள்ளுகிறார், அவர்.

### விளக்கம்.

மனிதன் உயிருடன் வாழ்வதற்கு இன்றியமை யாதவைகளில் ஒன்று, காற்று. அதுவும் சுத்தமான காற்று. நம் உடலிலுள்ள இரத்தத்தைச் சுத்தஞ் செய்து அழுக்குகளை வெளியேற்றுகிறது, அது. எனவே நாம் எப்பொழுதும் சுத்தமான காற்றைச் சுவாசிக்க வேண்டியது அவசியமல்லவா ? பெட்டிக் குள் அடைத்து வைக்கப்படும் தீபம் சிறிது நேரத் தால் அணைந்து விடுகிறது. எதனால் ? பெட்டிக்குள் சுத்தமான காற்று—அதாவது பிராணவாயு—இருக் கும்வரை தீபம் எரிகிறது. தீபம் எரிவதற்குப் பிராண வாயு உபயோகப்படுகிறது. அதேசமயத்தில் தீபம் எரியும் போது அசுத்தமான காற்று—அதாவது கரியமில வாயு—உற்பத்தியாகிறது. சிறிது நேரத் துக்குப்பின் பிராணவாயு அற்று, பெட்டி முழுவதும் கரியமிலவாயு நிரம்பி விடுவதனால் தீபம் அணைந்து விடுகிறது.

### உபதேசம்

நாமும் தினசரி அசுத்தமான காற்றையே சுவாசித்து வருவோமானுல் காலக்கிரமத்தில் பிணியாளர்களாகி இறுதியில் பெட்டிக்குள் வைத்த தீபத்தின் கதியே நமக்கும் ஏற்படுகிறது. ஆகவே நாம் வசிக்கும் வீடுகள் நல்ல காற்ருேட்ட வசதியுள்ளனவாக அமைக்கப்பட வேண்டும். இந்த வசதிகளை அமைப்பதெங்ஙனம்? போதிய அளவு கதவுகளையும் யன்னல்களையும் பொருத்த வேண்டும், வீடுகளில். கத்வுகளையும் யன்னல்களையும் பொருத்தி விட்டு இரவில் படுக்கைக்குப் போகும் போதும் சில சமயங்களில் பகல் நேரங்களிலும் கூட அவைகளை மூடி விடுவதனுல் எவ்வித பயனும் ஏற்படாது. இரவில் கதவுகளை, தற்பாதுகாப்பிற்காக மூடிஞலும் யன்னல்களை ஒருபோதும் மூடக்கூடாது. நல்ல காற்ருேட்ட வசதியுள்ள இடத்தில் நித்திரை செய்பவர்கள் நிம்மதியாகத் தூங்குகிருர்கள். ஆரோக்கியமாக வாழுகிருர்கள். இவ்வாருன வசதியற்ற இடத்தில், குறிப்பாக நன்கு அடைக்கப்பட்ட அறைகளில் நித்திரை செய்வோருக்கு நிம்மதியாகத் தூங்க முடிவதில்லை. பயங்கரமான கனவுகளைக் கண்டு அடிக்கடி திடுக்கிட்டு விழிக்கிருர்கள். அப்போது அவர்கள் தேகமெல்லாம் வியர்வை ஆருக ஓடுகிறது. உடல் பதறுகிறது மூச்சுத் திணறுகிறது. பயங்கரமாக அலறிக் கொண்டு எழுபவர்களும் உண்டு. இப்படிப்பட்ட இடங்களில் வசிப்போருக்கு அடிக்கடி சுகவீனங்கள், விசேடமாகச் சுவாச உறுப்புகள் சம்பந்தப்பட்டதும் இரத்தம் சம்பந்தப்பட்டதுமான நோய்கள் காணப்படும்; உடல் வெளுத்திருக்கும் உற்சாகமிராது.

### பாட்டி கதை

இரவில் பயங்கரமான கனவுகளைக்கண்டு ஒருவர் அலறிப் புடைத்து எழுந்திருக்கும்போதும் நித்திரையில் வாய் குளறும்போதும் நம் வீட்டுப் பெரியவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? உடனே அவரைத் தட்டி யெழுப்பி, வெளியிற் சென்று முகம், கால் சுழுவிவிட்டு வந்து நித்திரைசெய்யும்படி கூறுவார்கள். அவர் அப்படிச் செய்துவிட்டு வந்து படுத்தால், நிம்மதியாகத் தூங்குவார். பயங்கரக் கனவுகளுக்கும் வாய் குளறலுக்கும் வேறு காரணங்கள் இருந்தாலும் அசுத்தமான காற்றைச் சுவாசிப்பதனுலும் இவ்விதம் நேரிடுகிறது. கால், முகம் சுழுவிவிட்டு வந்து படுக்கும்படி கூறுவதன் மர்மமென்ன? அசுத்தமான காற்று நிரம்பிய வீட்டுக்குள் படுத்துத் திணறியவர் கால், முகம் கழுவுவதற்காகக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வருகிருர். வெளியே வந்தவுடன் சுத்தமான காற்றைச் சுவாசிக்கிருர். இதனுல் சுவாசப் பைகளுக்குப் புத்துணர்ச்சியேற்படுகிறது. இரத்தோட்டம் அதிகரிக்கிறது. உடம்பிலுள்ள உறுப்புக்கள் சீராக இயங்குகின்றன. நீர் தேகத்தில் பட்டவுடன் உற்சாகமும் புத்துணர்ச்சியும் ஏற்படுகின்றன, அவருக்கு. அதே சமயத்தில் அவர் திறந்துவிட்டு வந்த கதவு வாயிலாகப் புதிய காற்று அறைக்குள் பிரவேசிக்கிறது. அறைக்குள் நிரம்பியிருந்த அசுத்தமான காற்று வெளியேறுகிறது. ஆகவே அவர் மீண்டும் அறைக்குள் சென்று படுக்கும்போது நிம்மதியாக உறங்கமுடிகிறது.

### தாய்மார்களுக்கு ஒரு வேண்டுகோள்

குழந்தைகள் துயிலும் அறைக்குள், இரவில் வெளிச்சம் இருக்க வேண்டியது அவசியம். மின்சார இணைப்பு வசதியுள்ள வீட்டிலுள்ளவர்களுக்கு இருக்கவே இருக்கிறது, “பெட்ரூம் லைட்”. மற்றவர்கள் மண்ணெண்ணெய் விளக்கையோ தேங்காயெண்ணெய் விளக்கையோ தான் இரவிரவாக எரிக்க வேண்டியேற்படுகிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் காலையில் எழுந்தவுடன் உங்கள் பிள்ளைகளின் நாசித் துவாரத்தைப் பார்த்திருக்கிறீர்களா? கருமையான அழுக்குப் படிந்திருக்கும். அதுமட்டுமல்ல. உங்கள் நாசித்துவாரத்துக்குள் ஒரு துணியை விட்டுத் துடைத்துப் பார்த்தாலும் கருமையான அழுக்குக் காணப்படும். இது ஏற்படக் காரணமென்ன? விளக்கு எரியும்போது கரியமில வாயு உற்பத்தியாவதாக முன்பே சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? மண்ணெண்ணெய் விளக்கு எரியும்போது கரிய புகை வெளிப்படுவதையும் நாம் கண்ணுரக் கண்டிருக்கின்ருேம். அந்தப் புகை, நீங்கள் சுவாசித்துவிடும் அந்தக் கரியமில வாயுஇரண்டும் சிறிது நேரத்தால் அறைமுழுவதும் நிரம்பி விடுகின்றன. நல்ல காற்ருேட்ட வசதியுள்ள அறையானுல் இந்த அசுத்தமான காற்று வெளியேறிவிடுகிறது. சுத்தமான காற்று உட்புகுகிறது. காற்ருேட்ட வசதியற்ற அறையில் தூங்குவோர் இந்த அசுத்தமான காற்றையும் அத்துடன் கலந்துள்ள கரியையும் சுவாசிக்கிருர்கள். நாசித் துவாரத்துக்குள் உள்ள பசைப் பிடிப்பான நுண்ணிய மயிர்களில் இக்கரி ஒட்டிக்கொள்ளுகிறது. அசுத்தமான காற்று சுவாசப்பைகளுக்குள் செல்லுகின்றது. இந்த அசுத்தமான காற்றைச் சுவாசிக்கும் குழந்தையின் கதியென்ன? உடல் வெளிறி, சதாநோய் பிடித்து, சில சமயங்களில் இறந்தும் விடுகிறது. ஆகவே குழந்தை படுத்திருக்கும் அறை

(28 ம் பக்கம் பார்க்க)

# ஞானஞ்சலி

வித்துவான் திரு. ஆ. கந்தையா

பாடல் 1:

" சைவ சமயமே சமயம்
சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளி
காட்டு மிந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந்துழலுஞ் சமய நெறி
புகுத வேண்டா முத்தி தரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாருஞ் செகத்திரே "

(தாயுமானவர்)

அறிமுகம் 1 :

" கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி " என்று தமிழினத்தின் தொன்மை போற்றிப் பேசப்படுகின்றது. தமிழ் இனத்தைப் போலவே தமிழ் மொழியும் மிகவும் பழமையானது ; பண்பட்டது. அதே போலத் தமிழர்கள் கண்ட கடவுட் கொள்கையும் பழைமையும் பெருமையும் வாய்ந்தது ; உண்மையும் உயர்வும் உடையது ; அவர்கள் அன்று கண்ட சிவ நெறிக் கொள்கையே இன்று " சைவம் " என்ற பெயரில் வழங்குகின்றது. சைவ சமயத்திலே எல்லாச் சமய உண்மைகளும் அடங்கியுள்ளன. எனவே சைவசமயம் ஒரு தனிச்சமயம் அன்று என்பதும், சமயங்கடந்த சமரசம்—சன்மார்க்கம் என்பதும் ஆய்வோர்க்கு நன்கு புலனும். இவ்வாறு தொன்மையும் சிறப்பும் வாய்ந்த சைவசமயத்தின் சிறப்பினை இசைச் சித்திரமாக அமைத்து அளிக்கின்றோம்.

**உரை :** இறைவனை மனவாசகங் கடந்தவன் என்றும், " உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" என்றும் " கற்பனை கடந்த சோதி " என்றும் கூறக் கேட்கின்றோம். இறைவன் தன்மை இன்னதென்று இறைவனோடு ஒன்றி நின்று வாழ்ந்தோர் எடுத்து இயம்பியுள்ளனர். " இவ்வண்ணத்தன் ", " இத் தன்மையன் " என்று அவர்கள் கூறுமாற்றால் சைவத்தின் மேன்மையையும், சிறப்பினையும் கண்டு உணர முடிகின்றதல்லவா ?

இறைவனைக் குறித்துக் கூறப்படும் அரிய கருத்துக்களை நாம் சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது. பரிபாட்டில் வரும் பாடல் ஒன்று இறைவன் " இவ் வண்ணத்தன் ", " இத்தன்மையன் " என்று எடுத்துரைக்கின்றது.

பாடல் 2 :

" தீயினுள் தெறல்நீ, பூவினுள் நாற்றம் நீ
கல்லினுள் மணியும்நீ, சொல்லினுள் வாய்மை நீ
அறத்தினுள் அன்புநீ, மறத்தினுள் மைந்துநீ
வேதத்து மறைநீ, பூதத்து முதலும்நீ
வெஞ்சுடர் ஒளியும்நீ, திங்களுள் அளியும்நீ
அனைத்தும்நீ, அனைத்தினுட் பொருளும்நீ,
ஆதலின்
உறையும் உறைவதும் இலையே ; உண்மையும்
மறவியல் சிறப்பின் மாயமா ரனையை
முதன்முறை, இடைமுறை, கடைமுறை தொழிலின்
பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோ ரிலையே,
பறவாப் பூவைப் பூவி னோயே
அருள் குடை யாக அறங்கோ லாக
இரு நிழல் படாமை மூவே ழுலகமும்
ஒரு நிழ லாக்கிய ஏமத்தை மாதோ ".

உரை : சைவசமயம் தொன்மையானது. அது போலவே அதன் தத்துவங்களும் பெருஞ்சிறப்புடையன. சைவர்கள் வணங்கும் சிவபெருமான் " ஆதியும் அந்தமும் " இல்லாச் சோதியாகத் திகழ்பவன். " முன்னைப் பழம் பொருட்கு முனைப் பழம்பொருளாயும் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாகவும் " உள்ளான். மணிவாசகப் பெருமான் சிவபெருமானின் இயல்பினை இவ்வாறு பாடியுள்ளார்.

பாடல் 3 :

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரான் ஆகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோமே லோ ரெம்பாவாய்.

உரை : சிவத்தின் தன்மையைப் பாரதியார் அழகாகப் பாடியுள்ளார். வெட்டவெளியாய், அறிவாய், இறைவன் இருக்கின்றான் என்றும் " சூக்குமமாய் சூக்குமத்தில் சாலவுமே நுண்ணியதாய் " அவன் உள்ளான் என்றும், எங்குமுளான் யாவும் வலான், யாரும் அறிவான் என்றும் எடுத்துரைக்கின்றார்.

பாடல் 4 :

" எல்லை பிரிவு அற்றதுவாய், யாதெனுமோர் பற்று இலதாய்
இல்லை உளது என்று அறிஞர் என்றும் மயல் எய்துவதாய்
வெட்டவெளியாய் அறிவாய் வேறு பல சக்திகளைக்
கொட்டும்முகிலாய் அணுக்கள் கூட்டிப் பிரிப்பதுவாய்
தூல அணுக்களாய்ச் சூக்குமமாய்ச், சூக்குமத்திற்
சாலவுமே நுண்ணியதாய்த் தன்மை எல்லாந் தான் ஆகி
தன்மை ஒன்று இலாததுவாய்த் தானே ஒரு பொருளாய்த்
தன்மை பல உடைத்தாய்த் தான் பலவாய் நிற்பதுவே
எங்கும் உளான் யாவும் வல்லான் யாவும் அறிவான் எனவே
தங்கும் பல மதத் தோர் சாற்றுவதும் இங்கு இதையே "

உரை : சிவனை ஒரு சமயத்துக்குரிய தெய்வமே எனக் கருதுதல் முறையன்று. இறைவனை அடைவதற்குரிய சைவசமயமும் பல சமயங்களில் ஒரு சமயம் என்ற அளவில் நிற்பதும் அன்று.

" சைவ முதலா அளவில் சமயமும் வகுத்து
மேல் சமயங்கடந்த மோன சமரசம் வகுத்த நீ " என்று தாயுமானவர் போற்றிப் பேசுகின்றார்.

இதனால் சைவம் என்பது ஒரு நிலையில் சமயமாகவும், மற்றொரு பெரு நிலையாய சமயாதீதமாகவும் முரணின்றியே விளங்கும் பெருமையுடையது.

இவ்வுண்மையை " சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம் பொருளைக் கைவந்திடவே மன்னுள் வெளிகாட்டும் " என்ற தாயுமானவரின் திருவாக்கு இனிது தெளிவாக்குகின்றது.

சைவசமயம் என்னும் மரத்தின் உச்சியில் பழமாய்ப் பொருந்தியிருப்பது " சமயாதீதம் " என்று தேவாரம் கூறுகின்றது.

பாடல் 5 :

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்க முதற் கற்றகேள்வி
வல்லாள்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பார்த்து
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்த படி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்

குரல் : நம் சமய நெறியின் இயல்பையும் நோக்கையும் அது நிறைவேறுதற்காக அமைந்துள்ள குறிகளையும், அடையாளங்களையும் கோயில்களையும் அவற்றிலுள்ள மூர்த்தங்களையும், நிகழ்ச்சிகளையும், தீட்சை அனுட்டானங்களையும் வழிபாடுகளையும் பொருளுணர்ச்சியுடன் போற்றி ஏற்று வாழ்க்கையில் கொண்டுவந்தால் நம் வாழ்க்கை விரைவில் மேன்மையுறும்.

உரை : சமய நிலையும் சமயங்கடந்த மோன சமரச நிலையும் உடன்பாடாய்க் கொண்டுள்ள சைவசமயம் பிற சமயங்களோடு நீதி திறம்பா நெறியில் ஒத்துழைக்கவும் செய்யும். சைவசமயம் எல்லாச் சமயங்களுக்கும் தாயகமாகவும் உள்ளது. இவ்வாறு சைவசமயம் பிற சமயங்களைத் தன்னோடு இணைத்துக்கொண்டு மதிக்கும் இயல்பை சித்தியார் திருவாக்கு இனிது புலப்படுத்துகின்றது.

பாடல் 6 :

ஓது சமயங்கள் பொருள் உணருநூல்கள்
ஒன்றோ டொன்று ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசமயம், பொருள்நூல் யாதிங்கு ? என்னில்
இதுவாகும் அதுவல்ல தெனும் பிணக்கதின்றி

நீதியினுல் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றது யாது ? ஒருசமயம் அதுசமயம் பொருள் நூல்
ஆதலினுல் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்.

குரல் : சமயங்களும், அந்தச் சமயசாத்திரங்களும், அந்தச் சாத்திரங்களிலே சொல்லப்படும் பொருளும், ஒன்றேடொன்று ஒற்றுமையின்றிப் பலதிறத்தன வாக இருக்கும். இவைகளுள் மேண்மையான சமயம் யாது ? சாத்திரம் யாது ? என்று ஆராயுமிடத்து இது நல்லது அது தீயது என்ற பிணக்கு ஒன்றும் இல்லாமல் நீதி முறையினுல் எல்லாப் பொருள்களையும் தன்னகத்தே அடக்கி நிற்கும் சமயம் சைவசமயமாகும்.

உரை : அருள், அன்பு, அறம் என்ற மூன்றையும் சைவசமயத்தின் மூன்று தூண்கள் என்று கூற வேண்டும். அருள் : இறைவனிடமிருந்து எல்லா உயிர்கள் மாட்டும் செலுத்தப்படுவது ; அன்பு : இறைவன் மாட்டு உயிர்களால் செலுத்தப்படுவது. அறம் : இவ்விரண்டாலும் நிகழும் ஆருயிர்த் தொண்டு. இம் மூன்று குணங்களையும் பரிபாடலில் வரும் செய்யுள் ஒன்று இனிது புலப்படுத்துகின்றது.

பாடல் 7 :

" நின்குணம் எதிர்கொண்டோர் அறங் கொண் டோர் அல்லதை
மன்குண முடையோர் தாதவர் வணங்கியோர்,
செறுதீ நெஞ்சத்துச் சினநீடி ஞேரும்,
சேரா அறத்துச் சீரி லோரும்,
அழிதவப் படிவத்து அயரி யோரும்,
மறுபிறப் பில்எனும் மடவோரும், சேரார்
நின்னிழல் அன்னேர் அல்லது இன்னேர்
சேர்வா ராதலின், யாதும் இரப்பவை
பொருளும், பொன்னும் போகமும் அல்ல ; நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே "

உரை : சைவசித்தாந்தம் ஒரு தனிநெறி. பேரின்பத்திற்கு வழியைக் காட்டும் நெறி என்று அதனைக் கூற வேண்டும். சிவபோகத்தின் தன்மையை உணர்ந்த தாயுமானவர் சிவபோகம் என்ற பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்கு ஐயோ ! என்று வியந்து அதனைப் புசிக்க செகத்தாரைக் கூவி அழைக்கின்ருர் .

பாடல் 8 :

" காக முறவு கலந்துண்ணக்
கண்டீர், அகண்டாகார சிவ
போக மெனும் பேரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குதையோ
இன்புற்றிட யாமினி யெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும் செகத்தீரே "

அறிமுகம் 2 :

சைவத்தை அன்புச் சமயம் என்று சொல்லலாம். அன்பின் தீவிரத்திலே இறையருள் துலங்கி ஆன்மா வீடுபேறடைவது சைவத்தின் அடிப்படைக் கருத்து. அன்பு வேறு ; சிவம் வேறு என்று அறியாதவர் எடுத்துரைப்பர். ஆனுல் அன்பே சிவம், சிவமே அன்பு என்பதை அவர்கள் அறியார் என்று திருமூலர் எடுத்துக் கூறுகின்ருர், மாணிக்கவாசகர் :

" சாயா அன்பினை நாள்தொறும் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதியனுகி வினைகெடக்
கைதரவல்ல கடவுள் போற்றி "

பெருமையும் சிறப்பும் ஒருங்கே அமைந்த நம் சமயம். அதன் அடிப்டை உண்மைகளுள் ஒன்ருன " அன்பே சிவம் " என்ற பொருள் பற்றி இப்போது கேட்கலாம்.

அன்பே சிவம் :

அன்பற்ற உயிரைத் தாங்கிய உடலைத் திருவள்ளுவர் " என்பு தோல் போர்த்த உடம்பு " என்று

இழிவு படுத்திப் பேசுகின்றுர். அந்த அன்பாம் பண்பையே நம் சமயம் அடிப்படைப் பண்பாகக் கொண்டு மிளிர்கின்றது. அன்புச் சமயந்தான் நம் சைவ சமயம் இன்புக் கடவுள்தான் நாம் வணங்கும் சிவபெருமான். " கருணையே உருவமாகி இறைவன் இருக்கின்றுன் " என்று தேவாரம் கூறுகின்றது. அவ்வாறு அன்புருவமாக அமைந்த இறைவனுக்குத் தொண்டர்களாக இருந்தோர் நம் நாயன்மார்களாவர். " அன்பே சிவம் " என்ற தொடர் இவ்வுண்மையினைத் தான் விளக்குகின்றது.

" அருந்தழல் மாமகம் புரிந்தும், கடவுட் கங்கையாதியாம் புனல் படிந்தும், அனிலயோகத்திருந்தும், அணிமலர் தூவிப் பூசை நேர்ந்தும், போகமெல்லாம் சிறுகி யனைத்துயிர்க்கும் செய்ய வொண்ணுப் பெருந்தவங்கள் மிகப் பயின்றும் பெறுதற் கெட்டாப் பெரும்பயனை " அன்புவலை வீசிக் கடவுளிடமிருந்து பெறலாம். இறைவன் காட்சிக்கு அரியவன் ; ஆனல் அடியவர்க்கு எளியவன். அடியார்களின் அன்புக்கு அடிபணிந்து அருள் புரிந்தான் நம் இறைவன். " சார் பெனும் பிடியுள் அகப்படும் மலை " என்று அவன் பெருமை பேசப்படுகின்றது. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பக்தியோடு அவ்விறைவனை வழிபடில் அவ்விறைவன் அன்போடு அருள் சுரப்பான்.

அன்பு முதிர்ச்சியே அருள். அருளை வெள்ளம் என்று பெரியோர் கூறுவர். வெள்ளம் உயர்ந்த இடத்திலிருந்து தாழ்ந்த இடத்திற்குப் பாயும் தன்மையது. அது போல அருள் என்ற வெள்ளம் உயர்ந்தோர் தாழ்ந்தோரிடத்துக் காட்டும் உள்ள நெகிழ்ச்சியாகும். ஆகவே அன்பால் ஈர்த்தால் அவன் அருளை நாம் நம்பிக்கையாகப் பெறமுடியும். எல்லாவுயிரும் இன்புற்றிருக்க நினைத்து அன்புடையோராக இறைவன் இன்னருளைப் பெறுவோம். கடவுளை—அன்பே உருவான இறைவனை—நம் அடியார் பெருமக்கள் அன்பென்றே அழைத்தனர். " என் அன்பே ; அன்பினில் ஊறும் ஆனந்த வெள்ளமே ; அன்பினில் விளைந்த ஆரமுதே " என்று இறைவன் போற்றிப் பேசப்படுகின்றுன். அன்பில்லாதவர்கள் பிறவுயிர்களைத் துன்புறுத்தி வாழக்காணலாம்.

**" எவ்வுயிர்க்கும் நீங்காதுறையும் இறை**
**சிவன் என்று எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு"**

என்ற அருள் வாக்கு உயிர்களின் துன்பத்தினைத் துடைக்க உறுதுணையாயிற்று.

**" உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்—தெய்வம்**
**உண்மையென்று தானறிதல் வேண்டும்"**

என்ற **பாரதியார்** பாடலையும் இங்கு கூர்வோம். அன்பு சிவம் இரண்டும் ஒன்றே. அன்பு வேறு சிவம் வேறு என்று அறியாதவர் கூறுவர். அன்பே சிவமாவது.

**அன்பு சிவம் இரண்டென்பர் அறியார்**
**அன்பே சிவமாவது அவர் அறியார்**

என்பது திருமூலர் கூற்று.

உரை.— சைவசமயத்தின் பெருமையை உணர்வதோடு உலகம் அன்புப் பிணிப்பில் அமைதலும் வேண்டும். இறையருளை அன்பினுலேயே பெறமுடியும். அன்பின்றி மக்கள் இன்று வாழ்கின்றனர். கடவுளுக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள தொடர்பினை அறியாமையினுலேயே இதற்குக் காரணம். இது ஆன்மாவோடு சகசமாகவுள்ள ஆணவத்தின் தன்மை. அப்பர் சுவாமிகள் கூட தாம் ஒருகாலம் அறியாமைக்கு ஆளாகி இருந்ததை நினைந்து உருகுகின்றுர்.

**பாடல் 9 :**

**" என்பிருத்தி நரம்பு தோல் புகப் பெய்திட்டு**
**என்னையோர் உருவமாக்கி**
**இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்டு**
**என்றுள்ளக் கோயிலாக்கி**
**அன்பிருத்தி அடியேனைக் கூழாக் கொண்டு**
**அருள் செய்த ஆரூரர்தம்**
**முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்**
**காக்கைப்பின் போனவாறே "**

குரல் 1.—சைவசித்தாந்த உண்மைகளை எங்களுக்கு ஐயந்திரிபற உணர்த்தும் திருமுறைகளும், மெய்கண்ட சாத்திரங்களும் பிற்காலத்தில் பிறந்தவையே ஆயினும் மிகப் பழைய காலத்திலே தென்னாட்டில் இவை பரவியிருந்ததற்குச் சான்றுகள் உள. அநாதியாகிய ஆன்மா, அநாதியாகிய இறைவனுக்கு அநாதி காலத்திருந்தே அடிமையாய் உள்ளதென்ற அடிப்படையில் பல உண்மைகளைச் சித்தாந்தம் விளக்கும்.

குரல் 2 :

**“ இரும்பு நேர் நெஞ்சகக் கள்வனு ஞலுமுனை**
**இடைவிட்டு நின்றதுண்டோ**
**என்று நீ அன்று நான் உன்னடிமையல்லவோ ”**

என்று இக்கருத்தைத் தருகின்றார் தாயுமானவர். சைவசமயத்திற்குத் திருநெறி என்ற பெயர் தேவாரத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. இப்பெயருக்கு ஏற்ப சைவசமயத்தில் அழகுண்டு. மங்கள முண்டு, ஆன்மாவைப் பரவசப்படுத்தும் பக்திப் பாடல்கள் உண்டு. செவிகளுக்கு அமுதூட்டும் இன்னிசைப் பண்களுண்டு, கண்களைக் கவரும் கருவூலங்களும் உண்டு. அழகொழுகும் அற்புதத் திருவுருவங்கள் உண்டு.

பாடல் 10 :

வாழ்த்து

**“ வான் முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்”.**

---

## வாழுங்கள் ஆரோக்கியமாக

(23 ம் பக்கத் தொடர்ச்சி)

யில் எப்பொழுதும் நல்ல காற்றோட்டம் இருப்பதற்காக, யன்னல்களைத் திறந்து வைத்திருங்கள். யன்னல்களை அமைக்க முடியாவிட்டால் சுவர்களில் போதிய அளவு துவாரங்களையாவது அமைத்துக் கொள்ளுங்கள். சுத்தமான காற்றை நீங்களும் உங்கள் குழந்தையும் சுவாசித்து, ஆரோக்கியமாக வாழுங்கள்.

“ விளக்கு எரிப்பவர்களுக்குத்தானே இந்தப் புத்திமதி ” யென்று பெட் ரூம் லைட் எரிக்கும் தாய்மார்கள் எண்ணிவிடக்கூடாது. விளக்கு எரிக்காவிட்டால் புகை உண்டாகாது. உண்மைதான். ஆனால் நீங்களும் உங்கள் குழந்தையும், வேறு யாராவது அதே அறைக்குள் படுத்திருந்தால், அவர்களும் சுவாசித்துவிடும் அசுத்தமான காற்றைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள் ? ஆகவே உங்களுக்கும் அந்த விதி உரியதே.

### சூழல்

நம் வீடுகளில் போதிய அளவு யன்னல்களையும் கதவுகளையும் பொருத்திவிட்டால் மட்டும் நல்ல காற்றை நாம் பெறமுடியுமா ? வீட்டைச் சுற்றி குப்பையும் கூளமும் சேறும் சகதியும் இருந்தால் அவற்றிலிருந்து வெளிப்படும் துர்நாற்றம்—அசுத்தமான காற்று—வீட்டிற்குள்ளேதானே வரும் ? அதைத்தானே நாம் சுவாசிக்க வேண்டியிருக்கும் ? ஆகவே நமது வீட்டையும் அதன் சூழலையும் நாம் எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இப்படிச் சுத்தமாக வைத்திருப்பதால் சுத்தமான காற்றைப் பெறுவதோடு நுளம்பு, ஈக்கள் முதலிய ஜந்துக்களின் உபத்திரவத்திலிருந்தும் அவைகளால் உண்டாகும் மலேரியா, யானைக்கால் நோய் முதலிய நோய்களிலிருந்தும் வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்களிலிருந்தும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளுகிறோம். ஏனெனில், குப்பை, கூளங்கள், சேறு, சகதிகள்தான் நுளம்புகளும் ஈக்களும் உற்பத்தியாகிப் பல்கிப் பெருகும் நிலைகளாகும். ஆகவே வீடும் அதன் சூழலும் எப்பொழுதும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தம் பிள்ளைகளை வெளியில் விளையாடவோ அன்றி சுத்தமான காற்றுள்ள இடத்தில் உலாவவோவிடாமல் சதா வீட்டுக்குள் அடைத்து வைத்துக்கொள்ளுகிறார்கள், சில பெற்றோர்கள். இப்படி வைக்கப்படும் பிள்ளைகள் அடிக்கடி நோய்வாய்ப்படுவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சகல வயதுடையோரும் தினசரி சுத்தமான காற்றுள்ள இடத்தில் உலாவியோ விளையாடியோ வருவரேயாயின் பிணிகள் அவர்களை அண்டுவதற்கு அஞ்சும். சூழல் சுகாதார ஐந்து அம்சங்களில் ஒன்றான சுத்தமான காற்றோட்டமுள்ள வீடுகளில் வசித்து, காற்றோட்டமற்ற வீடுகளில் வசிப்பதனால் உண்டாகும் நோய்களைத் தவிர்த்துக் கொள்வோமாக.

# மிளகாய் உற்பத்தி

(சதாசிவம் செல்வரத்தினம், இளைஞர் விவசாயக் கழகம், பண்டத்தரிப்பு)

இலங்கை மக்களின் உபயோகத்திலிருக்கும் கறிச் சரக்குகளில் அதிக முக்கியமானது, கடித்தால் உறைக்கும் மிளகாயாகும். இந்த மிளகாய்க்காக நாம் தினமும் இறுக்கும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை எண்ணும்போது நாம் மிளகாய் உற்பத்தியைப் பெருக்கல் வேண்டும் என்பதை உணர்கிறோம். எனவே, நாம் மிளகாய் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய வழிவகைகளை ஆராய்வோம்.

நம் நாட்டின் வரண்ட வலயத்தில் மக்களுக்குத் தேவையான மிளகாய் முழுவதையும் உற்பத்தி செய்யலாம் எனக் கருதப்பட்டாலும், ஈரவலயத்திலும் மழையில்லாக் காலங்களில் பழம் பறிக்கக்கூடிய ஏதுக்களின் உதவியைக்கொண்டு மிளகாய்ச் சாகுபடியை அதிகரிக்கலாம்.

**மிளகாய் உற்பத்தியும் மண்வகையும்.**—மிளகாய் உற்பத்தியின் பயன் பல்வேறு மண்களிலும் வித்தியாசப்படும். மணற்செறிவு அதிகமில்லாததும், நீர்தேங்கி நில்லாததுமான மண் மிளகாய் உற்பத்திக்கு உகந்ததாகும். நடுத்தர இருவாட்டி மண் மிக வாய்ப்பானதாகும்.

**மிளகாய் உற்பத்தியும் செய்கைமுறைகளும்.**—மிளகாய் உற்பத்தியில் நல்ல முறைகளைக் கையாளுவதால் அதிக பயன் அடையலாம். வரண்ட வலயச் சேனைகளில் தானியங்களுடன் மிளகாய் விதையை விதைத்து உற்பத்தி செய்வதிலும் பார்க்க நிரைப் பயிராக நாட்டி, சிறந்த செய்கை முறைகளைக் கையாளும் இடங்களில் அதிகபயன் பெறலாம். சீரான நீர்பாய்ச்சலினாலும் அதிக பசளையிடுவதினாலும் மிளகாய் உற்பத்தி சித்திகரமானதாகும்.

**மிளகாய் உற்பத்தியும் காலமும்.**—வரண்ட வலயத்தில் மானாவாரிப்பயிராக உண்டுபண்ணும்போது புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் உண்டுபண்ணலாம். தென் மாகாணத்தின் சில பகுதிகளில் சித்திரை மாதத்தில் மானாவாரிப் பயிராக உண்டுபண்ணப்படுகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் நன்செய்ப்பயிராக வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றுக்காலத்தில் பெருமழை வீழ்ச்சிக்குப்பின் மார்கழி, தை மாதங்களில் உண்டுபண்ணப்படுகிறது. இங்கு சிறு போகத்தில் கிணறுகள் மூலம் நீர்ப்பாய்ச்சக்கூடிய வசதியுள்ள நெல்வயல்களில் பங்குனி, சித்திரை மாதங்களில் நாட்டலாம்.

**வர்க்கங்கள்.**—மிளகாயில் அனேக வர்க்கங்கள் உண்டு. அவற்றில் எமது அரசாங்கத்தாரின் 1954 ம் ஆண்டு அறிக்கையின்படி H–1 என்னும் வர்க்கமும், 1959 ம் 60 ம் ஆண்டு நடாத்தப்பட்ட பரிசோதனையின் மூலம் மயிலிட்டிக்கறுப்பன் என்னும் இனமும் சிறந்தன எனக் காணப்பட்டுள்ளன.

ஆனால் எங்கள் கிராமத்தில் ஒரு வகையைச் சார்ந்த மிளகாய் விவசாயிகளாற் பெரிதும் விரும்பப்படுகிறது. இந்த இளஞ்செடிகள் அதிகம் உயர வளர்வதில்லை. அளவான வளர்த்தி; அதற்கேற்ற மதாளிப்பு; பசிய நிறம்; காய்களோ 4–6 அங்குலம் வரை நீளமானவை; இந்த இனத்துக்கு சந்தையில் அதிக கிராக்கி; இது இளமையில் காய்க்க ஆரம்பித்து விடுகின்றது; 7–8 மாதம் வரை ஓயாமல் காய்க்கின்றது. குருமன் நோய் காண்பது அரிது. இதனுடைய உண்மையான பெயர் ஒருவருக்கும் புரியவில்லை. கட்டைக் கறுப்பன், யப்பான் கறுப்பன் என வழங்குகிறார்கள். இந்த வர்க்கம் ஏறக்குறைய 10 வருடங்களுக்கு முன்னிருந்தே இங்கு சாகுபடிசெய்யப்படுகிறது.

**நாற்றங்கால்கள்.**—மிளகாய் உற்பத்தியின் பலாபலன் நாற்றங்கால்களிலே தங்கியிருக்கிறது. ¼ ஏக்கர் தரையில் நாட்டப் போதிய கன்றுகளை 90 சதுர அடிமேடையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் எனக் கணிக்கப்பட்டிருப்பினும், சிறந்த தயாரிப்பும் பராமரிப்புங் கொண்ட மேடைகளானல் 45 சதுர அடி மேடைகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பது நாம் அனுபவவாயிலாகக் கண்ட முடிபாகும். மேடைகள் ஒவ்வொன்றும் 3 அடி அகலமுள்ளனவாகவும் இடையில் 1 அடி அகலவடிகால்களினாற் பிரிக்கப்பட்டனவாகவும் இருத்தல் வேண்டும். ஒரு சதுர அடிக்கு 2–2½ இறாத்தல் வீதம் நன்கு உக்கிய மாட்டெரு அல்லது கூட்டெரு இடுதல் வேண்டும். மேடைகளுக்கு நன்கு வாடிய குழைகள் தாழ்க்கப்படுமிடத்து எருவின் அளவை அரைப்பங்காகக் குறைக்கலாம். மேடையின் விளிம்புகள் சிறிது வரம்புகளாகக் கட்டப்படுமிடத்து மண்ணும் பசளையும் அரிமானத்தின் நின்றும் பாதுகாக்கப்படும். இப்படிச் செய்வதால் இளம் கன்றுகள் தைரியம் உடையனவாகக் காணப்படும். ¼ ஏக்கர் தரையில் நாட்டப் போதிய கன்றுகளை 2–2½ அவுன்சு விதையை விதைத்துப் பெற்றுக் கொள்ளலாம். நன்கு காய்ந்த முதல் தரமான 6–8 அவுன்சு செத்தல் மிளகாயிலிருந்து 2–1½ அவுன்சு விதை எடுக்கலாம். இந்த விதையை

வீச்சு விதைப்பில் அல்லது 1 அங்குல இடைவெளி கொண்ட வரிசைகளில் விதைக்கலாம்.

விதைத்தபின் விதைகளை மூடி $\frac{1}{2}''$ மண் இடுதல் வேண்டும். பின்பு தண்ணீர் தெளித்து நிழலும் இடுதல் வேண்டும். தினமும் காலையிலும், அவசியமானுல் மாலையிலும் பூவாளி கொண்டு நீர் தெளித்தல் வேண்டும். விதை விதைத்து 8–10 நாட்களால் முளைகளைக் காணலாம். முளைத்ததும் நிழலை அகற்றுதல் வேண்டும். நாற்று வளர்ந்து நடுகைக்கேற்ற பருவமானவுடன் அதாவது 45 நாட்களால் நடுகையை ஆரம்பித்தல் வேண்டும்.

**தரையைப் பண்படுத்தல்.**—மிளகாய்ச் செய்கையில் அதிக பயனடைய வேண்டுமாயின் நடுகை நிலத்தை நன்கு பண்படுத்தல் வேண்டும். நடுகைக்கும் ஆரம்ப சாகுபடிக்குமிடையில் போதிய காலம் இருக்கக் கூடியதாகத் தரையைப் பண்படுத்தல் வேண்டும். உழவுக்குப்பின் மாட்டெரு அல்லது கூட்டெருப் பரவி மறு உழவு உழுதல் அல்லது கொத்துதல் வேண்டும். இப்படிச் செய்வதினுல் மண்ணுடன் பசளை கலக்கப்படுவதுமல்லாமல் மண்ணும் நன்கு பண்படுத்தப்படும். மானுவாரித் தரைக்கு $\frac{1}{4}$ ஏக்கருக்கு $2\frac{1}{2}$–3 வண்டி பசளையிடுதல் நலம். நடுகைக்கு முன்னர் போதிய காலம் இருக்கக் கூடியதாகச் சணற் பயிரைப் பசுந்தாள்ப் பயிராகச் செய்வதால் அல்லது ஆடுமாடு பட்டியடைப்பதால் சிறந்த பயனடையலாம் என்பது எங்கள் முடிவு.

**மிளகாய்க் கன்றுகள் நடுதல்.**—செய்கை முறைக்குத் தக்கதாக நடுகைத்தூரங் கவனிக்கப்படுதல் வேண்டும். மானுவாரிப் பயிராயின் நிரைகளுக்கிடையில் 3 அடிகளும் நிரையில் நிலையங்களுக்கிடையில் $1\frac{1}{2}$ அடிகளும் விடலாம். நன்செய்கையில் இருபக்கங்களிலும் 3 அடிகள் விடுதல் உகந்ததாகும். மாலை நேரங்களில் கன்றுகள் நாட்டப்படுதல் நலம். கன்றுகள் நாட்டும் போதும் அதன் பின்னரும் மழை தூறுதல் நலமானதாகும்.

**பராமரிப்பும் பசளையும்.**—மிளகாய்ச் சாகுபடியில் பராமரிப்புக்கேற்ற பயன் அடையலாம். நடுகையிலிருந்து 10–15 நாட்களின் பின் கன்றுகளைச் சுற்றிவர 6–8 அங்குல விட்டத்தில் கிண்டி 5 கன்றுகளுக்கு 1 அவுன்சு என்ற வீதத்தில் நவச்சார கந்தகை இடவேண்டும். அதிலிருந்து 2 வாரங்களால் மறுமுறையும் கிண்டி களை அகற்றுதல் வேண்டும். மேலும் 3 வாரங்கள் வரை சென்றதும் களைகளை நீக்கி தரையைக்கொத்தி, நீர்ப்பாய்ச்சலுக்கேற்ற பாத்திகளும் வாய்க்கால்களும் அமைத்தல் வேண்டும். நீர்ப்பாய்ச்சும்போதும் அவசியமெனக் காணும் போதும் 20–28 இருத்தல் வரை நவச்சார கந்தகை பயன்படுத்தலாம். இரண்டாம் அல்லது மூன்றும் முறை பழம் பறித்தபின் மண்காய்ந்து இறுகியிருப்பின் கிண்டி நன்கு உக்கிய கூட்டெரு பிரயோகிக்கலாம் அல்லது 28 இருத்தல்வரை நவச்சார கந்தகை பயன்படுத்தலாம். இதனுல் பயிர் மீண்டும் இளமை பெற்றுக் காணப்படும்.

நமது நாட்டின் பல்வேறு பாகங்களிலும் மிளகாய்ச் செடிகளைக் குருமன் நோய் பெரிதும் பாதிக்கின்றது. இதனுடைய தாக்குதலைக் குறைப்பதற்காக நாற்று மேடைகளில் 1 அவுன்ஸ் 50% டி. டி. ரி. யுடன் 1 அவுன்ஸ் கந்தகத்தூளைச் சேர்த்து இரண்டு கலன் தண்ணீரில் கலந்து 2 வாரங்களுக்கு ஒரு முறையும், வளர்ந்த பயிர்களுக்காயின் மேலே சொல்லப்பட்ட நாசினிகளை ஒரு கலன் தண்ணீரில் கலந்து $\frac{1}{4}$ ஏக்கருக்கு 8–10 கலன் கலவை வீதம் 2 வாரங்கட்கொருமுறையும் தெளித்தல் வேண்டும். இப்படி ஒருமுறை தெளிப்பதற்கு ரூபா 3–4·50 வரை செலவாகும். கிருமிநாசினிக் கலவைகள் ஏறத்தாழ 6 முறைகளில் தெளித்தல் வேண்டும்.

**மிளகாய் பறித்தல்.**—நாற்று நட்டு 5–6 வாரங்களின் பின் பூக்கத்தொடங்கும். பூத்து ஒரு மாதம் சென்றபின் காய்கள் பறிக்கலாம். காய் மிளகாய் பிடுங்குவதால் மேலும் பயிர் அதிகம் காய்க்கும். நன்கு சிவந்த பழங்களை மாத்திரம் செத்தல் மிளகாய் தயாரிப்பதற்குப் பறித்தல் வேண்டும். பழங்களில் ஈரம் இருப்பின் செத்தல் நிறம் குன்றும். எனவே, மழைபெய்த உடனே பனிகாலத்திலோ பழங்களை உலரவிடக்கூடாது. 7–10 நாட்களுக்கொரு முறையாக 5–8 தடவைகளில் பழங்கள் பறிக்கலாம்.

**உலர்த்தல்.**—பழங்கள் ஒலிப்பான செந்நிறம் அடைவதற்காக ஓர் கட்டிடத்தினுள் 2 நாட்கள் வரை குவித்து வைத்தல் வேண்டும். பின்பு தினமும் வெயிலில் காயத்தக்க வசதி செய்தல் வேண்டும். மூன்றும் நாள் ஓர் மரப்பலகை கொண்டு பழங்களை அமர்த்தி தட்டையாக்குதல் வேண்டும். இம்முறையைக் கையாளுவதால் 7–10 நாட்களில் உலர்த்தி முடிக்கலாம்.

**தினிசு படுத்தலும் சேகரித்தலும்.**—நல்ல பருமனும் ஒலிப்பான செந்நிறமுடைய செத்தல் மிளகாய்களை 1 ம் தினிசாகவும், மற்றைய செத்தல்களை 2 ம் தினிசாகவும் பிரித்து ஐதான இழைகளையுடைய சாக்குகளிலிட்டுச் சேகரிக்கலாம்.

**விளைவு.**—மானுவாரிச் செய்கையிலிருந்து ஏக்கருக்கு 4–6 அந்தர் செத்தல் மிளகாய் பெறலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. நன்செய்கையில் 10–20 அந்தர் வரையும் செத்தல் மிளகாய் பெறலாம் என்பது எனது கருத்து.

**கமத்தொழில் விளக்கம்**

# மதிப்புரை

**புது உலக சரித்திரம்**

1789 முதல் இன்றுவரை

ஆக்கியோன் : **வி. இ. நிக்கலஸ், பீ. ஏ.**

சரித்திரப் பேராசிரியர்
ஆசிரியகலாசாலே, கொழும்புத்துறை

பதிப்பு : ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்

விலை : ரூபா 7/75

உயர்தர வகுப்புக்களுக்கேற்ற சரித்திர நூல்கள் பலவுள வெனினும், தமிழிலே இவை மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றன. மேலும் அத் தகைய நூல்கள் பெரும்பாலும் மொழிபெயர்ப்பு நூல்களாகவே காணப்படுகின்றன. இக்குறையை நிறைவாக்கும் முறையில் எழுந்ததுதான் திரு. நிக்கலஸ் ஆசிரியர் அவர்கள் எழுதிய நூலாகும்.

"சரித்திரத்தை நிதானத்துடனும் மதிநுட்பத்துட னும் ஆய்ந்து கற்கும் ஆற்றலேயும் சரித்திர மனோ பாவத்தையும் ஆர்வத்தையும் மாணவரிடத்தில ஒருங்கே விருத்தி செய்யவேண்டுமென்பதே இதன் முதன்மையான குறிக்கோளாகும். இதனுலே பல ஆங்கில நூல்களே உசாவியும், ஏற்ற பல் சிறு குறிப்புக்களுடனும், பல தேசப்படங்களுடனும் இதனே உருவாக்கியுள்ளோம். எனவே, தாய் மொழிக்கல்வியின் இன்றியமையாமை மதிக்கப் படும் இந்நாளில், இந்நூல் சரித்திரத்தில் விவேக மும் விருப்புமுள்ள தமிழாசிரியர்கள், உயர்வகுப்பு மாணவர்கள், பல்கலேக்கழக, ஆசிரிய கலாசாலே மாணவர்கள் யாவரும் சரித்திரத்தின் பொருளே ஓரளவு உணர்ந்து கொள்ளவும், மேலும் அதனே ஆழ்ந்து கற்கத்தூண்டவும் பயன்படுமென்பது எமது நம்பிக்கையாகும்" என இந்நூலாசிரியர் குறிப் பிட்ட குறிக்கோளும் நம்பிக்கையும் இந்நூல் வாயிலாக நிறைவெய்தியிருப்பதைக் காணலாம்.

இலங்கைத் தன்மொழி அலுவலகத்தார் வெளி யிட்ட கலேச்சொற்கள் பொருத்தமுடையனவா அன் றேல் ஏற்கத்தக்கனவா என்பது விவாதத்துக் குரிய விடயமாகும். ஆனுல் இந்நூலாசிரியர் அரச கரும மொழித்திணேக்களத்தின் கலேச்சொல் வரம் புக்குட்பட்டே ஒழுகவேண்டியிருந்தமையால் இந்நூலாசிரியர் கையாண்டுள்ள இடப்பெயர்க ளினதும் மக்கட் பெயர்களினதும் தமிழுருவங்கள் பொதுவாக இதுவரை வழக்காற்றிலுள்ளனவற்றிற் குச் சிறிது வேறுப்பட்டிருப்பதைக் காணலாம். இந்நூ லுக்கு அணிந்துரை அளித்த கலாநிதி ஹியசிந்து சிங்கராயர்தாவீது அடிகளாரும் இதனேச் சுட்டிக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய சரித்திரத்தை அலுப்பின்றி ஊக்கத் துடன் படிக்கக்கூடிய முறையில் தித்திக்கும் தீந் தமிழ் நடையில் இந்நூல் முழுவதனேயும் எழுதி நிறைவேற்றுவதென்பது பாரியதொரு வேலேயாகும். சில நூல்களிற் காணப்படும் சென்றுதேய்ந்திறுதல் என்னுங்குற்றம் இந்நூலிற்காணப்படாதிருப்பது ஒரு தனிச் சிறப்பாகும். ஐரோப்பிய நாடுகளின் வரலாற்றைச் செவ்வனே கோவைப்படுத்தி விளக் குவதில் இந்நூலாசிரியர் வெற்றியீட்டியுள்ளார் என்பதற்கையமில்லே.

465 பக்கங்கள் கொண்ட இப்பெரியநூலேப் படிப் போர் உள்ளத்தில், கரிசனே குன்ருது இந்நூலாசிரியர் எழுதிநிறைவேற்றுவதற்குக் காரணமாயிருந்தவை, பல்லாண்டுகளாக ஆசிரிய பயிற்சிக்கல்லூரியில் சரித் திரம் கற்பித்ததனுல் ஏற்பட்ட அநுபவமும், அயரா உழைப்புமாகும். இந்நூலில் எட்டு தேசப்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலின் சிறப்புக்கேற்ப, இதனே அழகிய முத்துப்போன்ற எழுதுக்களே உபயோகித்து ஆசீர்வாத அச்சகம் கண்கவர் வனப்புடன் வெளி யிட்டுள்ளது.

இந்நூலாசிரியரின் சிறந்த தொண்டு பாராட்டுதற் குரியது. ஆசிரியரும் மாணவர்களும் இந்நூலுக்குப் பேராதரவளித்து, இந்நூலாசிரியர் மேன்மேலும் இத்துறையில் வேறு நூல்களே எழுத ஊக்கிவிடு வார்கள் என எதிர்பார்க்கின்றேம்.

## அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

## தமிழில் சட்ட சம்பந்தமான நூல்கள்

| | | விலை ரூ. ச. | தபாற் செலவு ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | அத்தியாயம் 60 கார்ச் சாரதிகள் சம்பந்தமான ஒழுங்குகள் ஏற்பாடு செய்வதற்கானதொரு கட்டளைச் சட்டம் .. .. | 0 10 | 0 10 |
| 2. | அத்தியாயம் 91—நொத்தாரிஸ்மார் சட்டம் .. .. | 1 30 | 0 35 |
| 3. | அதிகாரம் 95—கலியாணப் (பொதுச்) சட்டம் .. .. | 0 55 | 0 20 |
| 4. | (i) 1940 ம் ஆண்டின் 15 ம் இலக்க கலியாணப் பதிவுச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. ..<br>(ii) 1944 ம் ஆண்டின் 49 ம் இலக்க ஷை<br>(iii) 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க ஷை ..<br>(iv) 1946 ம் ஆண்டின் 34 ம் இலக்க ஷை .. | 0 50 | 0 10 |
| 5. | அத்தியாயம் 104—தத்துவப் பத்திரங்கள் சட்டம் .. . | 0 20 | 0 10 |
| 6. | அத்தியாயம் 115—வீட்டுப் பணியாளர் பதிவுக் கட்டளைச் சட்டம் .. | 0 30 | 0 10 |
| 7. | அத்தியாயம் 116—தொழிற் சங்கக் கட்டளைச் சட்டம் .. .. | 0 80 | 0 20 |
| 8. | அத்தியாயம் 120—வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டம் .. | 0 40 | 0 10 |
| 9. | அத்தியாயம் 198—கிராமச் சமுதாயச் சட்டத்தின் மறுபதிப்பு .. | 1 30 | 0 35 |
| 10. | 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்க கிராமச் சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| 11. | 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்க இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்துதலுக்காகவும் பராதீனப் படுத்துதலுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. .. | 1 05 | 0 35 |
| 12. | 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்க கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்குமான சட்டம் .. .. .. | 0 45 | 0 20 |
| 13. | 1939 ம் ஆண்டின் 32 ம் இலக்க பிரசவ உதவிப் பணக் கட்டளைச் சட்டம் | 0 30 | 0 20 |
| 14. | 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளச் சபைகள் சட்டம் .. | 1 10 | 0 35 |
| 15. | 1942 ம் ஆண்டின் 45 ம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் .. | 2 75 | 0 35 |
| 16. | 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்க ஒரு ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடுகள் செய்வதற்கான ஒரு சட்டம் .. .. .. | 0 40 | 0 10 |

குறிப்பு.—அரசாங்க வெளியீட்டு அலுவலக அத்தியட்சர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.